விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 157 வள்ளுவர் ஆண்டு 2055 வைகாசி 11 வெள்ளிக்கிழமை (24.05.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

EDUS
077 488 7774
G.C.E A/L 2026
கணித விஞ்ஞான பிரிவு மாணவர்களுக்கான புதிய ஒன்லைன் வகுப்புக்கள் ஆரம்பம்..!
COM.MATHS|BIOLOGY|PHYSICS|CHEMISTRY|ICT
Tamil & English Medium
25.05.2024
(C-0438)
Quality learning | Guaranteed Results | Professional Service | EDUS
ஒன்லைன் கற்பித்தலில் இலங்கையின் முன்னணி ஆசிரியர்களுடன் உங்கள் சாதனைப் பயணத்தை ஆரம்பித்திடுங்கள்.

## புலிகளால் கொல்லப்பட்டவர்களை ஏன்?
## மன்னிப்புச் சபையின் செயலாளர் அஞ்சலி செலுத்தவில்லை
### சரத் வீரசேகர கேள்வி



(கொழும்பு)

விடுதலைப் புலிகள் அமைப்பின் போராளிகளை நினைவுகூர்ந்த சர்வதேச மன்னிப்புச் சபையின் செயலாளர் அக்னெஸ் கலமார்ட் புலிகளால் படுகொலை செய்யப்பட்ட சிங் 15

## திருகோணமலையில் கார் விபத்து
## அல்வாய் திக்கத்தைச் சேர்ந்த 6 வயதுச் சிறுமி உயிரிழப்பு

(திருகோணமலை)

திருகோணமலையில் இடம்பெற்ற கார் விபத்தில் அல்வாய் மேற்கு திக்கம் பகுதியைச் சேர்ந்த 6 வயதுச் சிறுமி ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இதில் திக்கம் சித்திவிநாயகர் வித்தியாலயத்தில் தரம் 1இல் கல்வி 15



## நெடுந்தீவுக்கான படகுச் சேவை இன்று இல்லை

(யாழ்ப்பாணம்)

கடல்கொந்தளிப்பாக இருக்கும் என்ற காரணத்தால் பொதுமக்கள் பாதுகாப்பு கருதி குறிகாட்டுவான் - நெடுந்தீவு கடற்போக்குவரத்து இன்றைய தினம் இடம்பெறமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது. 15


## வங்கக்கடலில் காற்றழுத்த தாழ்வு
### புயலாக மாற வாய்ப்பு

(கொழும்பு)

வங்கக் கடலில் உருவாகியுள்ள காற்றமுத்த தாழ்வுப் பகுதி தீவிர புயலாக மாறும் என்று இந்திய வானிலை மையம் எச்சரித்துள்ளதாக அந்நாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன.

அந்தத் தீவிர புயலுக்கு 'ரீமல்' (Remal) 15

# மூன்று நாள் விஜயமாக
# ரணில் இன்று வடக்கு விஜயம்



(யாழ்ப்பாணம்)

- யாழ்.பல்கலையின் மருத்துவபீட பயிற்சிப் பிரிவை இன்று திறந்து வைக்கின்றார்.
- வடக்கு இளைஞர்களுடன் ரணில் முக்கிய கலந்துரையாடலில் பங்கேற்கவுள்ளார்.
- வடக்கில் 10 முக்கிய நிகழ்வுகளில் ரணில் கலந்து கொள்ளவுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பல்வேறு நிகழ்வுகளில் கலந்து கொள்வதற்காக இன்று வடக்கிற்கு விஜயம் செய்யவுள்ளார்.

3 நாட்கள் விஜயமாக வடக்கிற்கு வரும் ஜனாதிபதி ரணில், யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் வவுனியா மாவட்டங்களில் உரித்து தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் காணி உரிமங்களை வழங்கி வைக்க 15

## கிளிநொச்சியில் விபத்து; குடும்பஸ்தர் மரணம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கனகபுரத்தில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் - மகேந்திர ரக வாகன விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதில் கிளிநொச்சி வட்டக்கச்சியைச் சேர்ந்த தம்பிராசா ரவிச்சந்திரன் (வயது- 35) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தவராவார்.


கடந்த 17ஆம் திகதி வெள்ளிக்கிழமை வட்டக்கச்சியில் இருந்து 15

## கனிய மண் அகழ்வினால் மன்னார் தீவு அழிவடையும் அபாயம்
### சுமந்திரன் எம்.பி தெரிவிப்பு

(மன்னார்)

கனிய மண் அகழ்வினால் மன்னார் தீவு முற்று முழுதாக அழிவடையும் அபாயம் உள்ளது என பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

மன்னார் தீவில் கனிய மணல் அகழ்வுக்கு எதிராக சட்ட ரீதியாக 15



## தையிட்டி விகாரைக்கு எதிராக கறுப்புக் கொடி போராட்டம்



15


## நாட்டில் மூன்றில் ஒரு பகுதியினர் கடன் தேவையால் அவதியுறுகின்றனர்

(கொழும்பு)

நாட்டின் மூன்றில் ஒரு பகுதியினர் கடன் தேவையால் அவதியுறுகின்றனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் சனத்தொகையில் 34.4 வீதமானோர் கடன் தேவையினால் 15

## யாழில் வெசாக் தின நிகழ்வு



15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன, மத வேறுபாடுகள் ஏதுமின்றி நாட்டுக்காக ஒன்றுபடுவோம்

## வெசாக் வாழ்த்துச் செய்தியில் ஜனாதிபதி ரணில்

"சிறந்த நாளைக்காக இன்றே தியாகம்செய்வோம்" என்ற கௌதம புத்தரின் போதனையின் அடிப்படையில் ஞானம் பெறுவதற்காக புத்தர் கொண்டிருந்த பெரும் உறுதிப்பாட்டை, ஒரு நாடாக இந்த இக்கட்டான தருணத்தில் நாம் அனைவரும் வளர்த்துக் கொள்ள வேண்டும். என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது வெசாக் வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து ஜனாதிபதியின் ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில் குறிப்பிடப் பட்டுள்ளதாவது,

அனைவரையும் சமமாக நடத்தும் பௌத்த உபதேசத்தை இன்று நாம் நினைவுகூர வேண்டும். அதேபோல் ஒரு நாடாக அதை நடைமுறையில் செயல்படுத்துவதை உறுதி செய்ய வேண்டும்.

இனம், மதம், சாதி, கட்சி வேறுபாடின்றி நாம் அனைவரும் ஒன்றிணைந்து கட்டியெழுப்பப்படும் இந்நாட்டை தொடர்ந்து முன்னோக்கிக் கொண்டு செல்ல வேண்டும். அதற்கு புத்தரின் போதைனைகள் வழிகாட்டும்.

வெசாக் தினம் என்பது கௌதம புத்தரின் பிறப்பு, ஞானம் பெறல் மற்றும் பரிநிர்வாணத்தை நினைவுகூரும் உலக பௌத்தர்களின் புனிதமான நாளாகும்.

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உள்ள பௌத்தர்கள் விளக்குகளை ஒளிரவிட்டு, வழிபாடுகளுக்கு முன்னுரிமை அளித்து, மிகுந்த பக்தியுடன் இதனைக் கொண்டாடுகின்றனர்.

விரைவான பௌதிக வளர்ச்சியை நோக்கி நகரும் உலகில் மனவளர்ச்சியுடன் கூடிய ஆன்மீக மற்றும் கண்ணியமான 'மனிதனை' உருவாக்குவதே இந்த வெசாக் பண்டிகையின் முக்கிய நோக்கம் என்பதை நினைவில் வைத்து, அனைவருக்கும் சிறந்த வெசாக் பண்டிகை வாழ்த்துகளைத் தெரிவிக்கிறேன் ஏன்றுள்ளது. (ம-7)

கடந்த நூறு வருடங்களில் இல்லாதவாறு

# கத்திரி வெய்யில் காலத்தில் வடக்கில் கொட்டி தீர்த்த மழை

வடக்கு மாகாணத்தின் கடந்த 100 ஆண்டு கால காலநிலை வரலாற்றில் அதிகூடிய மழை வீழ்ச்சி இவ் வருட மே மாதத்தில் பதிவாகியுள்ளதாக யாழ். பல்கலைக்கழக புவியியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி நா. பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

வழமையாக வடக்கு மாகாணத்தின் மே மாத சராசரி மழை வீழ்ச்சி 90 மி.மீ. ஆகும். மே மாத மழை நாட்கள்சராசரியாக 6 ஆகும்.

ஆனால், இந்த ஆண்டு மாதம் முடிவடையாத நிலையில் இடம் சார்ந்த ரீதியில் வேறுபாடுகள் காணப்பட்டாலும் மாகாண சராசரி என்ற வகையில் கடந்த திங்கட்கிழமை வரை 230 மி.மீ. மழை கிடைத்துள்ளது.

இந்த மாத இறுதியில் இதனளவு இன்னமும் அதிகரிக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

அத்துடன் இந்த மாதத்தின் இது வரையான 20 நாட்களில் 12 நாட்கள் மழை கிடைத்துள்ளது.

ஒப்பீட்டளவில் முல்லைத்தீவு மாவட்டத்தின் கிழக்கு பகுதி, யாழ்ப்பாண மாவட்டத்தின் வலிகாமம் பகுதி அதிக அளவிலான மழை வீழ்ச்சியைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

# மரம் முறிந்து விழுந்ததில் யுவதியொருவர் பலி

(புத்தளம்)

புத்தளம் பகுதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இரண்டு யுவதிகள் மீது மரம் ஒன்று வீழ்ந்ததில் யுவதி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த விபத்து நேற்று பகல் புத்தளம் முந்தலம் 61 ம் சந்தியில் இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் பயணித்த கோவில் சந்தி - வில்பொத பகுதியை சேர்ந்த 23 வயதுடைய யுவதி ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

ஹலவத்தை நோக்கி மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த போது, வீதிக்கு அருகில் இருந்த மரம் ஒன்று காற்றினால் இரண்டு யுவதிகள் பயணித்த மோட்டார் சைக்கிள் மீது விழுந்ததால் குறித்த விபத்து நிகழ்ந்துள்ளது.

படுகாயமடைந்த மற்றைய யுவதி ஆபத்தான நிலையில் சிலாபம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக முந்தலம் பொலிஸார் தெரிவிக்கின்றனர். (ம-7)

# சமூக மாற்றமொன்றினூடாகவே நாட்டின் பிரச்சினைகளுக்கு தீர்வு

## முன்னாள் ஜனாதிபதி மைத்திரி


(கொழும்பு)

தொழினுட்ப அறிவுடன் முன்னேறக்கூடிய எதிர்கால சந்ததியினரான மாணவர்களுக்கு தெளிவூட்டல்கள் வழங்கப்பட வேண்டும் அதனூடாக சமூகத்தில் மாற்றமொன்றை ஏற்படுத்த வேண்டும். பொருளாதார அரசியல் சமூக பிரச்சினைகளுக்கு தீர்வுஎட்டப்பட வேண்டும்" என முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது இலங்கை ஒரு பௌத்த நாடு. எதிர்காலம் தொடர்பாக மக்கள் இன்று சவாலை எதிர்கொண்டுள்ளனர் என்றார். (ம-7)


குருவே துணை

வாழ்க வையகம் வாழ்க வளமுடன்



யாழ்ப்பாணம் மனவளக்கலை மன்ற அறக்கட்டளை வழங்கும்

பிரம்மஞானம் மற்றும் அருள்நிதியர் பயிற்சி 2024

இடம் :- யாழ் அறிவுத்திருக்கோவில்

பிரம்மஞானம்

காலம் :- 24.05.2024, 25.05.2024, 26.05.2024

(வெள்ளி, சனி,ஞாயிறு )

அருள்நிதியர் பயிற்சி

07.06.2024, 08.06.2024, 09.06.2024

(வெள்ளி, சனி, ஞாயிறு )

தலைமை

மனவளக்கலை பேராசிரியர் அருள்நிதி சி.முருகானந்தவேல் அவர்கள் (தலைவர், யாழ்ப்பாணம் மனவளக்கலை மன்ற அறக்கட்டளை மற்றும் யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவில்)

பயிற்சி வழங்குபவர்கள்

மனவளக்கலை முதுநிலை பேராசிரியர் அருள்நிதி K.R. முனிரத்தனம் அவர்கள் (தமிழ்நாடு இந்தியா)

மனவளக்கலை பேராசிரியர் அருள்நிதி க.செல்வகுமார் அவர்கள் (தமிழ்நாடு இந்தியா)

(C-0439)

பயிற்சியில் பங்கு பெற விரும்புபவர்கள் தொடர்பு கொள்ளவும்.

யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவில்

81, பிறவுண் வீதி, கொக்குவில், யாழ்ப்பாணம்

தொ.இல :- 021 222 2772

Jaffnaskytrust@gmail.com


# எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் களம் காண தயாராகும் சரத்பொன்சேகா!

பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் இராணுவத்தளபதியுமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட தீர்மானித்துள்ளதாக தென்னிலங்கை ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதன்படி எதிர்வரும் ஜூன் மாதம் பொன்சேகா இது தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்பை வெளியிடுவார் எனவும் அவர் சுயேட்சை வேட்பாளராக போட்டியிட உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் சிலர் அவருக்கு ஆதரவாக இருப்பதாகவும், மேலும் பல அரசியல் கட்சிகளின் அரசியல்வாதிகளுடன் பேச்சுவர்த்தை நடத்தவுள்ளார் என்றும் கூறப்படுகிறது.

மேலும், கொழும்பிலுள்ள வெளிநாட்டு இராஜதந்திரிகள் குழுவுடன் பொன்சேகா இது குறித்து உத்தியோகபூர்வமற்ற மட்டத்தில் கலந்துரையாடியுள்ளதாகவும் அறிய முடிகிறது. (ம-7)


விற்பனைக்கு

கல்லரியும் மிசின் 02 விற்பனைக்கு உண்டு.

(850)

077 97 89 375
075 97 73 797


# கைதிகளை பார்வையிட விசேட அனுமதி

வெசாக் தினத்தை முன்னிட்டு சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் கைதிகளை பார்வையிடுவதற்காக விசேட அனுமதி சிறைச்சாலைகள் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் அனைத்து சுகாதார வழிகாட்டல்களுக்கு உட்பட்டதாக குறித்த வெளியாட்களை பார்வையிடும் நடவடிக்கை நாட்டில் அனைத்து சிறைச்சாலைகளிலும் மேற்கொள்ளப்படும் என சிறைச்சாலைகள் ஆணையாளர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)


பணியாளர் வெற்றிடம் - யாழ்ப்பாணம்

- எழுதுனர் (ஆண்/பெண்) (அனுபவம் விரும்பத்தக்கது)
- வெல்டர் (Welders)
- காப்பென்டர் (Carpenter)
- தொழிற்சாலை உதவியாளர்கள் (ஆண்/பெண்)

- சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
- நேர்முகத்தேர்வு 25.05.2024 காலை 10.00 மணிக்கு அலுவலகத்திற்கு நேரில் வரவும்.

EUT

புன்னாலைக்கட்டுவன் தெற்கு,

யாழ்ப்பாணம்.

(C-0435)

[illegible] 0110, 077 [illegible]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடளாவிய ரீதியில் வைத்தியசாலைகளில்
# வேலைநிறுத்தப் போராட்டம்

(கொழும்பு)

**நாடளாவிய ரீதியிலுள்ள அனைத்து வைத்தியசாலைகளிலும் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடுவதற்கு சுகாதார தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு தீர்மானித்துள்ளது.**

இந்த நிலையில், குறித்த போராட்டமானது எதிர்வரும் 28 ஆம் திகதி முன்னெடுக்கப்படவுள்ளது.

உத்தியோகபூர்வ சீருடை கொடுப்பனவிற்கு இணையாக ஏனைய வற்றுக்கு வழங்கப்பட வேண்டிய கொடுப்பனவை அதிகரிப்பது தொடர்பான சுற்றறிக்கை வெளியிடப்படவில்லை எனவும் விசேட கொடுப்பனவை அதிகரிப்பதற்கான சுற்றறிக்கை 15



பிரிவினரை விடுத்து வெளியிடப்பட்டுள்ளதாக சுகாதார தொழிற்சங்க கூட்டமைப்பின் இணை ஏற்பாட்டாளர் சானக்க தர்மவிக்ரம தெரிவித்துள்ளார்.

அத்தோடு தாதியர்கள் உள்ளிட்ட சுகாதாரத் துறையின் 72 தொழிற்சங்கங்கள் கடந்த நாட்களில் மாகாண மட்டத்தில் பணிப் பகிஷ்கரிப்பை முன்னெடுத்திருந்தன.

பொருளாதார நீதியை வழங்குவதற்கு முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு சுகாதார அமைச்சு தீர்வை வழங்குவதாகக் கூறிய போதிலும், அதனை நிறைவேற்றாமைக்கு எதிர்ப்பு தெரிவித்து சுகாதார தொழிற்துறையைச் சேர்ந்த 72 தொழிற்சங்கங்கள் இணைந்து இந்த பணிப்பகிஷ்கரிப்பை முன்னெடுத்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

லங்கா மஹால் (PVT) LTD
உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை
அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை.
(354)
இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.
இந்தியா தொடர்புகளுக்கு :
0091956615 6719
WESTERN UNION WU MoneyGram Ria MONEY TRANSFER
ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.
யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு.
077 839 3974

பாராட்டி வாழ்த்துகின்றோம்
இலங்கை அதிபர் சேவை தரம் III (SLPS III) இற்கான நியமனத்தைப் பெற்ற எமது யாழ்.கல்வி வலயத்தின் விசேட கல்வி ஆசிரியர்களான



திரு. தர்மரத்தினம் நிஷாந்தன்
B.Com, PGDE,NDT
(யா/முத்துத்தம்பி மகா வித்தியாலயம்)



திருமதி. அனுசியா கஜேஸ்வரா
B.Com,PGDE,NDT
(யா/திருக்குடும்ப கன்னியர் மடம் தேசிய பாடசாலை)

ஆகியோரை மேலும் கல்விப் பணி சிறக்க மனதாரப் பாராட்டுகின்றோம்.
வாழ்த்துவோர்: யாழ்.கல்வி வலய விசேட கல்வி உதவிக்கல்விப்பணிப்பாளர், ஆசிரிய ஆலோசகர், விசேடகல்வி ஆசிரியர்கள்.
(849)

# சுற்றுலா செயற்பாடுகளில் 76 ஆவது இடத்தில் இலங்கை

## பொருளாதார பேரவை தரவரிசை

(கொழும்பு)

உலக பொருளாதார பேரவை 'பயணம் மற்றும் சுற்றுலா மேம்பாட்டு குறியீடு 2024' என்ற தலைப்பில் உலக நாடுகளின் சுற்றுலா செயற்பாடுகளை தரவரிசை படுத்தியுள்ளது. இந்தப் பட்டியலில் இலங்கை 76 ஆவது இடத்தை பிடித்துள்ளது.

குறிப்பாக, இலங்கை சுற்றுலா சேவைகள் மற்றும் உள் கட்டமைப்பு, கலாசார வளங்கள் மற்றும் பொழுதுபோக்கு அல்லாத செயற்பாடுகள் பிரிவுகளில் மோசமான மதிப்பெண் பெற்றுள்ளது.

அதே நேரத்தில் போட்டித் தன்மைமிக்க விலை மற்றும் பயணம், சுற்றுலா சமூக பொருளாதாரத் தாக்கம் ஆகியவற்றில் அதிக மதிப்பெண் பெற்றுள்ளது.

இந்நிலையில், இந்தப் பட்டியலில் 2021 ஆம் ஆண்டு 74 ஆவது இடத்தில் இருந்த இலங்கை, தற்போது 119 நாடுகளில் தரவரிசையில் 76 ஆவது இடத்துக்கு சரிந்துள்ளது. (நி-6)

# எரிபொருள் விற்பனை வழமையை விட அதிகரிப்பு

(கொழும்பு)

வெசாக் வாரம் ஆரம்பமாகிய நிலையில் எரிபொருள் விற்பனை வரலாறு காணாத வகையில் அதிகரித்துள்ளதாக எரிபொருள் விநியோகஸ்தர்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த சில நாட்களாக எரிபொருள் விற்பனை குறைந்திருந்த நிலையில் திடீரென அதிகரித்துள்ளதாக குறிப்பிட்டுள்ளனர்.

சில நாட்களாக எரிபொருள் பாவனை அதிகரித்து வருவதால், எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் வழமையை விட அதிகமான எரிபொருள் இருப்புக்களை விண்ணப்பம் செய்துள்ளதாக அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

வெசாக் நிறைவடைந்ததன் பின்னர் எரிபொருள் விற்பனை முன்பு போலவே குறையும் என எரிபொருள் விநியோகஸ்தர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (நி-6)

## மோசமான காலநிலையால்
# சுமார் 36,900 பேருக்கு மின்சாரம் செயலிழப்பு

## அமைச்சர் காஞ்சன தகவல்

(கொழும்பு)

மோசமான காலநிலை காரணமாக கடந்த 3 நாட்களில் 36,900 வாடிக்கையாளர்களுக்கு மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளதாக மின் சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

அமைச்சர் தனது உத்தியோகபூர்வ X கணக்கில் குறித்த தகவல்களை பதிவு செய்துள்ளார்

இதேவேளை மின்சாரத்தை சீரமைக்க மேலதிக சேவை ஊழியர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாகவும், மின் சாரம் துண்டிக்கப்பட்ட இடங்களுக்கு உடனடியாக மின்சாரம் சீர் செய்யப்பட்டு விநியோகிக்கப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, மின்சார பாவனையாளர்கள் 1987 என்ற அவசர தொலைபேசி இலக்கத்திற்கு அழைப்பு அல்லது குறுஞ் செய்தி அனுப்பி மின்வெட்டு தொடர்பில் அறிவிக்க முடியும் என அமைச்சர் தனது அறிவிப்பில் மேலும் குறிப்பிட்டுள்ளார். (நி-6)

# சீரற்ற காலநிலை காரணமாக இதுவரை நால்வர் உயிரிழப்பு

(கொழும்பு)

நாட்டில் தற்போது நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக இதுவரை நான்கு பேர் உயிரிழந்துள்ளதாகப் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, [illegible] மாத ம்பே மற்றும் நாத்தாண்டிய ஆகிய பிரதேசங்களிலிருந்து இந்த மரணங்கள் பதிவாகியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். மேலும் சீரற்ற கால நிலை காரணமாக 11 மாவட்டங்களில் உள்ள 67,591 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அஸ்வினின் 'சுழலா' நடராஜனின் 'வேகமா'



- சேப்பாக்கம் ஆடுகளத்தில் கைகூடப்போவது எது?
- குவாலிபயர் 2இல் ஹைதராபாத் – ராஜஸ்தான் மோதல்



சென்னை, சேப்பாக்கம் மைதானத்தில் இன்று நடக்கும் அரையிறுதி போன்ற தகுதிச் சுற்று-2ல் ஹைதராபாத் - ராஜஸ்தான் அணிகள் மோதுகின்றன.

இதில் தோற்கும் அணி வெளியேறும். வெல்லும் அணி கொல்கத்தாவுடன் பைனலில் (மே 26) மோதும்.

"எலிமினேட்டர்" போட்டியில் பெங்களூருவை வென்ற உற்சாகத்தில் ராஜஸ்தான் களமிறங்குகிறது. ரியான் பராக் (567 ஓட்.), அணித் தலைவர் சாம்சன் (521), ஜெய்ஸ்வால் (393) ஓட்ட மழை பொழியலாம். பின் வரிசையில் ஹெட்மயர், துருவ் ஜூரெல் கைகொடுத்தால் நல்லது. தமிழக "சுழல்" நாயகன் அஷ்வின், 14 போட்டியில், 9 விக்கெட் டுக் களைச் சாய்த்துள்ளார். சேப்பாக்கம் மைதானத்தில் விளையாடிய அனுபவம் இவருக்கு சாதகம். சகால் (18 விக்கெட்) ஒத்து ழைப் புத் தரலாம். "வேகத்தில்" அவேஷ் கான் (16 விக்கெட்), பவுல்ட் (13) நம்பிக்கை தரு கின்றனர்.

**பலமான துடுப்பாட்டம்**

ஹைதராபாத் அணிக்கு ஆரம்பத்தில் "டிராவிஷேக்" (டிராவிஸ் ஹெட், 533 + அபிஷேக் சர்மா, 470 ) கூட்டணி மிரட்டலாம். கிளாசன் (413 ரன்), நிதிஷ் குமார் ரெட்டி (285) கைகொடுக்க வாய்ப்பு உண்டு. "வேகத் தில்" மிரட்டும் தமிழகத்தின் நடராஜன், 12 போட்டிக்ளில், 18 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியுள்ளார். இவருக்கும் சேப்பாக்கம் மைதானம் பரிச்சயமானது. புவனேஷ்வர் குமார் (11 விக்கெட்), அணித் தலைவர் கம்மின்ஸ் (16) இருப்பது பலம்.

## யுவராஜ் மனதில் ரிஷாப்
### 'உலக' லெவினில் தேர்வாக விருப்பம்



"உலகக்கிண்ண ("ரி20") தொடருக்கான இந்திய "லெவன்" அணியில் விக்கெட் கீப்பர் இடத்துக்கு ரிஷாப் பன்ட் தேர்வு செய்யப்பட வேண்டும்," என, யுவராஜ் சிங் தெரிவித்துள்ளார்.

வெஸ்ட் இண்டீஸ், அமெரிக்காவில் ஐ.சி.சி., "ரி20" உலக க்கிண்ணத் தொடரின் 9ஆவது சீசன் ஜூன் 2ல் ஆரம்பமாகிறது. மொத்தம் 20 அணிகள் பங்கேற்கின்றன.

இந்திய அணி "ஏ" பிரிவில் பாகிஸ்தான், கனடா, அயர்லாந்து, அமெரிக்க அணிகளுடன் இடம்பிடித்துள்ளது. இத்தொடரின் விளம்பரத் தூதுவராக இந்திய அணி முன்னாள் "சகலதுறை வீரர்" யுவராஜ் சிங் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்திய அணி தேர்வு குறித்து யுவராஜ் கூறியது,

சர்வதேச போட்டிகளில் வீரர்களின் செயற்பாட்டை அடிப்படையாகக் கொண்டு "ரி20" உலககிண்ணத்துக்கு இந்திய அணி தேர்வு செய்யப்பட்டிருப்பது மகிழ்ச்சி. ஐ.பி.எல்., தொடரில் வீரர்களின் பங்களிப்பை கணக்கில் எடுத்துக் கொள்ளவில்லை. ஒரு வேளை அப்படிச் செய்திருந்தால் ஐ.பி.எல்., போட்டியில் ஏமாற்றிய ஹர்திக் பாண்ட்யா தேர்வு செய்யப்பட்டிருக்க மாட்டார். சர்வதேச போட்டியில் சிறப்பாக விளையாடியதால் மட்டுமே இவர் தேர்வானார்.

இந்திய "லெவன்" அணியில் விக்கெட் கீப்பர் இடத்துக்கு சஞ்சு சாம்சனை விட ரிஷாப் பன்டிற்கு முன்னுரிமை அளிக்க வேண்டும். ஏனெனில் இடது கை துடுப்பாட்ட வீரரான இவர், இத்தொடரில் சாதிப்பார் என்ற நம்பிக்கை உள்ளது. அணித் தலைவர் ரோகித், ஜெய்ஸ்வால் ஜோடி ஆரம்பம் தர வேண்டும். மூன்றாவது இடத்தில் ஹோலி களமிறங்கினால் நல்லது. சூர்யகுமாரை 4ஆவது இடத்தில் களமிறக்கலாம். சமீபத்திய போட்டிகளில் சிறப்பாக விளையாடி வரும் ஷிவம் துபேக்கு "லெவின்" அணியில் நிச்சயம் இடம் கிடைக்கும். நல்ல "போர்மில்" உள்ள ரிங்கு சிங், சுப்மன் கில்லை மாற்று வீரராக தேர்வு செய்திருப்பது வருத்தம். வாய்ப்பு கிடைத்தால் சிறப்பாக செயற்படுவர். இவ்வாறு யுவராஜ் கூறினார்.

## இந்திய - வங்கம் மோதல்
### 'உலக' பயிற்சி ஆட்டத்தில்




"ரி20" உலகக் கிண்ணத் தொடருக்கான பயிற்சி ஆட்டத்தில் இந்தியா - பங்களாதேஷ் அணிகள் ஜூன் 1இல் மோதுகின்றன.

வெஸ்ட் இண்டீஸ், அமெரிக்காவின் ஜூன் 2-29ல் ஐ.சி.சி., "ரி20" உலகக்கிண்ணத் தொடரின் 9ஆவது சீசன் அரங்கேற வுள்ளது.

இதில் "நடப்பு சம்பியன்" இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, இந்தியா, பாகிஸ்தான் உள்ளிட்ட 20 அணிகள் பங்கேற்கின்றன.

இந்திய அணி "ஏ" பிரிவில் கனடா, அயர்லாந்து, பாகிஸ்தான், அமெரிக்க அணிகளுடன் இடம் பிடித்துள்ளது.

இத்தொடருக்கான பயிற்சி போட்டி அட்டவணை வெளியானது. மொத்தம் 17 அணிகள் மே 27 முதல் ஜூன் 1 வரை பயிற்சி ஆட்டத்தில் பங்கேற்கின்றன. மொத்தம் 16 போட்டிகள், டெக் சாஸ், புளோரிடா, டிரினிடாட் அன்ட் டுபாகோவில் உள்ள மைதானங்களில் நடக்க வுள்ளன.

இங்கிலாந்து, பாகிஸ்தான், நியூசிலாந்து அணிகள் பயிற்சி போட்டியில் விளையாட வில்லை. மே 29இல் புளோரி டாவில் நடக்கும் போட்டியில் தென்னாபிரிக்க அணியினர், இரு பிரிவுகளாக பயிற்சி ஆட்டத்தில் விளையாடுகின்றனர்.

இந்திய அணி ஒரே ஒரு பயிற்சி போட்டியில் பங்கேற்கிறது. ஜூன் 1இல் நடக்கும் போட்டியில் பங்களாதேஷை எதிர்கொள்கிறது. இதற்கான இடம் விரைவில் அறிவிக்கப்படும். மே 30இல் டிரினிடாட்டில் நடக்கவுள்ள போட்டியில் மே.தீவுகள் - அவுஸ்திரேலியா அணிகள் மோது கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராம உத்தியோகத்தர்களுக்கு சம்பள அதிகாரிப்பு

## அமைச்சரவை அங்கீகாரம்

(கொழும்பு) இலங்கையில் 13,000 இற்கும் மேற்பட்ட கிராம உத்தியோகத்தர்களின் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை அதிகரிக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. அதற்கமைய இலங்கை கிராம சேவையாளர் சேவையை ஸ்தாபிப்பதற்காக, சேவைக்கான அரசியலமைப்பு வரைவு அரச சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இதன்படி புதிய கிராம அலுவலரின் அடிப்படை சம்பளம் 28,940 ரூபாய் முதல் 30,140 ரூபாயாக உயரும் என்றும் கிராம எழுத்தர் சேவையில் தரம் 2 அதிகாரியின் அடிப்படை சம்பளம் 33,690 ரூபாவாகவும் தரம் 3 அதிகாரியின் அடிப்படை சம்பளம் 38,590 ரூபாயாகவும் உயர்த்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (நி-6)

# அந்தியேட்டி

## சபிண்டீகரண அழைப்பிதழ்



கடந்த 10.05.2024 வெள்ளிக்கிழமை அன்று சிவப்பேறு அடைந்த எமது குடும்பத் தலைவர்

### அமரர்.திரு.விசாகரத்தின ஐயர் தெய்வேந்திர ஐயர்

சிரேஷ்ட பூசகர்

ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயம் தொண்டைமானாறு

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 25.05.2024 நாளை சனிக்கிழமை காலை 6.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். தொடர்ந்து முற்பகல் 11.00 மணியளவில் இடம்பெறும் சபிண்டீகரணக் கிரியைகளிலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்வுகளிலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.


செல்வச்சந்நிதி,
தொண்டைமானாறு.

(848)

இவ்வண்ணம்
குடும்பத்தினர்.

# 90 வது பிறந்தநாள் நினைவலைகளும் 30 வது ஆண்டு நினைவஞ்சலியும்

தோற்றம் 09 . 06 . 1934



மறைவு 26 . 05 . 1994

### அமரர்.திருமதி.திருநாவுக்கரசு திரவியம்

(திதி- பிரதமை)

அன்பதனை சொரிந்து அருகிருந்து ஆதரித்த
எங்கள் தெய்வமே அம்மா
உங்கள் புன்னகை பூத்த பொன்முகம்
மறைந்து முப்பது ஆண்டுகள் ஆனதுவோ
உங்களை வெல்வில் முருகன் பாதமதில்
அமர்த்தி வணங்குகிறோம் தாயே
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

(804)

"மூர்த்திவாசம்"
முருகமூர்த்தி வீதி,
சங்கானை.

உங்கள் பிரிவால் துயருறும்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

# இராசிபலன்

24.05. 2024
வைகாசி 11, வெள்ளிக்கிழமை,
பிரதமை முன்னிரவு 7.43 மணிவரை

அனுசம் முற்பகல் 10.35 மணிவரை
சுபநேரம் 5.52-7.22 மணிவரை
இராகுகாலம் 10.22-11.52 மணிவரை

சந்திராஷ்டமம் - ரேவதி, அச்சுவினி

வளவன்

**மேஷம்** வீண் விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது, எடுத்த காரியங்கள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம், விரயங்கள் கூடும் நாள், கொடுக்கல் வாங்கல்களில் கவனம் தேவை.

**ரிஷபம்** குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும் நாள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், காரிய அனுகூலமுண்டு.

**மிதுனம்** வியாபார விருத்தியுண்டு, அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும், காலை நேரத்திலேயே கலகப்பான செய்திகள் வந்து சேரலாம்

**கடகம்** பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், மற்றவர்கள் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள்.

**சிம்மம்** வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், சுப செய்திகள் வந்து சேரலாம், தொல்லை கொடுத்தவர்கள் தோள் கொடுத்து உதவ முன்வரலாம், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.

**கன்னி** உயர்வான சிந்தனைகள் மனதில் தோன்றும், வழிபாடு முன்னேற்றம் தரும், தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், மறக்க முடியாத சம்பவங்கள் இடம்பெறலாம், போசன நன்மையுண்டு.

**துலாம்** தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**விருச்சிகம்** நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்.

**தனுசு** இடமாற்றத்தால் இனிய மாற்றம் காண வேண்டிய நாள், அதிகாரிகளை அனுசரித்துச் செல்வது நல்லது, பிரியமான ஒருவரைச் சந்திக்கும் வாய்ப்புண்டு.


**மகரம்** அன்பு நண்பர்களின் ஆதரவு கிடைக்கும் நாள், திட்டமிட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், இறைவழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், வருமானம் திருப்தி தரும்.

**கும்பம்** வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், போசன சுகமுண்டு, காரிய அனுகூலமுண்டு.

**மீனம்** எதிர்காலம் குறித்து முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், மனக்குழப்பம் தீர்ந்து மகிழ்ச்சி கூடும் நாள், உடல் நலனில் முன்னேற்றம் காணும் நாள், பயணங்கள் கைகூடும்.

கடமை தவறாமையை கதிரவனிடம் கற்றுக்கொள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்தின் தீர்த்த உற்சவம் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்றது. காலை உற்சவ மூர்த்திகளுக்கு பூசை வழிபாடுகள் இடம் பெற்றதைத் தொடர்ந்து உற்சவ மூர்த்திகள் உள் வீதி ,வெளி வீதி உலா வந்தனர்.அதனைத் தொடர்ந்து பாலாவி தீர்த்தக்கரையில் பக்திபூர்வமாக தீர்த்த உற்சவம் இடம் பெற்றது. (படங்கள்-ஜோசப்நயன்)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

"பாலஸ்தீன மண்ணின் காசாவில் மரண ஓலம் விழிக்குமா உலகம்?" என்ற தலைப்பிலான சமூக விஞ்ஞானப் படிப்பு வட்ட விசேட கலந்துரையாடல் இன்று வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு கே.கே.எஸ். வீதி கொக்குவில் சந்தியில் உள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் இடம் பெறவுள்ளது. (நி-6)

## ஸ்ரீ ஜெகந்நாதரின் ரதயாத்திரை ஆரம்பமாகும் இடம் மாற்றப்பட்டுள்ளது

(கிளிநொச்சி)

ஸ்ரீ ஜெகந்நாதரின் ரத யாத்திரை விழா தவிர்க்க முடியாத காரணத்தினால் இடமாற்றப்பட்டுள்ளது.

ஸ்ரீ ஜெகந்நாதரின் ரத யாத்திரை கனகபுரம் வீதி, ஸ்ரீ தான்தோன்றீஸ்வரி நாகபூசணி அம்பாள் ஆலயத்தில் இருந்து நாளை சனிக்கிழமை காலை 8 மணிக்கு ஆரம்பிக்கும் ரத யாத்திரை கிளிநொச்சி, கரடிப்போக்கு சந்தி,RS Green Barathi Resort ஐ வந்தடையும்.

அதனைத் தொடர்ந்து மதியம் 1 மணிக்கு மகேஸ்வர பூசையும் இடம்பெறவுள்ளது. (நி-6)

## வெசாக்கை முன்னிட்டு ஐஸ்கிரீம் வழங்கி வைப்பு



(கரணவாய்)

வெசாக் தினத்தை முன்னிட்டு பல்வேறு பொலிஸாரால் ஐஸ்கிரீம் வழங்கும் நிகழ்வு நேற்று வியாழக்கிழமை முற்பகல் பருத்தித்துறை நகரில் இடம் பெற்றது.

பருத்தித்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கலந்து கொண்டு ஐஸ்கிரீமை வழங்கி வைத்தார். இதில் பெருமளவானோர் நீண்ட வரிசையில் நின்று ஐஸ்கிரீமை பெற்றுக் கொண்டனர். (நி-6-60)

## தனியார் காணிகள் சுவீகரிப்பு; மன்னாரில் இடம்பெற்ற கலந்துரையாடல்

(மன்னார்)

மன்னார் தீவகப் பகுதிக்குள் தனியாருக்கு சொந்தமான காணிகளை தொடர்ச்சியாக சில தனியார் கம்பனிகள் சட்டவிரோதமாக சுவீகரிக்கும் சம்பவங்கள் இடம் பெற்று வருகின்றது.

இவ்வாறான செயற்பாடுகளை நிறுத்துவதற்கான சட்ட ஏற்பாடுகள் குறித்து கலந்துரையாடல் இடம் பெற்றது. மெசிடோ நிறுவனத்தின் ஏற்பாட்டில் அதன் பணிப்பாளர் ஜாட்சன் பிகிறாடோ தலைமையில் ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் மற்றும் பாதிக்கப்பட்ட தனியார் காணி உரிமையாளர்களுக்குமான சந்திப்பு நேற்று மெசிடோ காரியாலயத்தில் இடம்பெற்றது.

மன்னார் நடுக்குடா, கொன்னையன் குடியிருப்பு போன்ற பகுதிகளில் தாங்கள் வசித்து வரும் காணிகளை தனியார் நிறுவனங்கள் தொடர்ச்சியாக அடாத்தாக வேலிகள் அடைத்து கையகப்படுத்துவதாகவும் இது தொடர்பில் அதிகாரிகளிடம் தெரியப்படுத்தியும் நடவடிக்கை எடுப்பது இல்லை என தனியார் காணி உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

அதேநேரம் தனி காணி ஒன்றைக் கொள்வனவு செய்யும் சில நிறுவனங்கள் அந்த காணிகள் மாத்திரம் இன்றி அதை சூழ உள்ள காணிகளையும் சுவீகரிப்பதாகவும் குற்றம் சுமத்தியிருந்தனர்.

இந் நிலையில் குறித்த விடயம் தொடர்பில் மேற்கொள்ள வேண்டிய சட்ட நடவடிக்கைகள் தொடர்பில் தனியார் காணி உரிமையாளர்களுக்கு சட்டத்தரணி சுமந்திரனால் தெளிவுபடுத்தப்பட்டதுடன் குறித்த பிரச்சினை தொடர்பில் வழக்குத் தாக்கல் செய்வதற்கு தேவையான ஆவணங்களை தயாரிப்பது தொடர்பிலும் கலந்தாலோசிக்கப்பட்டது. (நி-6-285)



வேலணை பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட 2024 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட முச்சக்கர வண்டிகளுக்கு பிரதேச சபையின் செயலாளர் தலைமையில் ஸ்ரிக்கர் முத்திரைகள் ஒட்டிவைக்கப்பட்டுள்ளது.



# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு : 1996 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 29 1/4 உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: வைத்தியர்<br>எதிர்பார்ப்பு: பொறியியலாளர் அல்லது வைத்தியர்<br>தொ.இ: B/14517 | பிறப்பு - 1999 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>உயரம் : 5'5"<br>j i fi k{nj hogy; Bsc, HR(Canada)<br>எதிர்பார்ப்பு: Degree Holder, ஆங்கில அறிவு அவசியம் (கிறிஸ்தவர்களும் ஏற்றுக் கொள்ளப்படும்)<br>தொ.இ: G/14548 |
| பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 23 சூரி செவ் 2 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: Bsc London<br>எதிர்பார்ப்பு: உத்தியோகம்<br>தொ.இ: B/14519 | பிறப்பு- 1988 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 61<br>உயரம் : 5'6"<br>தகைமை/தொழில்: BA, RDO<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி அரச உத்தியோகம்<br>தொ.இ: G/14550 |
| பிறப்பு:- 1987 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: 5 சூரி செவ் 10 இல்<br>உயரம் : 5'7"<br>தகைமை/தொழில்: Engineer (அமெரிக்கா)<br>எதிர்பார்ப்பு: Engineer, Doctor<br>தொ.இ: B/14520 | பிறப்பு - 1994 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>சூரி செவ் 6 இல் கி.பா: 5<br>உயரம் : 5'4"<br>தகைமை/தொழில்: கணக்காளர் (கனடா)<br>எதிர்பார்ப்பு: தகுதியான வரன்<br>தொ.இ: G/14553 |
| பிறப்பு: 1996 இந்து<br>நட்சத்திரம்: பூசம் கி.பா: 5<br>உயரம்: 5"7"<br>தகைமை/தொழில்:- Engineer (Singapore)<br>எதிர்பார்ப்பு: Engineer, Doctor<br>தொ.இ: B/14521 | பிறப்பு - 1998 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>சூரி செவ் 6இல் உயரம்:5'4"<br>தகைமை/தொழில்: Undergraduate (Final Year), B.pharm<br>எதிர்பார்ப்பு: பொறியியலாளர் தகுந்த வரன் பட்டதாரி. Pharmacist<br>தொ.இ: G/14560 |

கல்யாணமாலை
இல. 3, 2 ஆம் ஒழுங்கை,பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கருகம்பனை - அந்திரானை

# கவுணாவத்தை நரசிங்க வைரவர் ஆலயம்

## வருடாந்த மரபுவழி வேள்விப்பொங்கல் - 2024

விளக்கு வைப்பு
24.05.2024
வெள்ளிக்கிழமை(இன்று)

## வேள்விப்பொங்கல்
01.06.2024 சனிக்கிழமை

எட்டாம்மடை
07.06.2024
வெள்ளிக்கிழமை

கருகம்பனை அந்திரானை கவுணாவத்தை நரசிங்க வைரவர் ஆலய வருடாந்த மரபுவழி வேள்விப்பொங்கலிற்கான விளக்கு வைப்பு இன்றைய தினம் 24.05.2024 வெள்ளிக்கிழமை இரவு 7.00 மணிக்கு இடம்பெற்று 01.06.2024 சனிக்கிழமை வேள்விப்பொங்கலும் நடைபெற்று 07.06.2024 வெள்ளிக்கிழமை எட்டாம்மடையும் இடம்பெறவுள்ளன. (851)

குறிப்பு – வேள்விப் பொங்கல் தினத்தன்று வழமை போன்று கிடாய்கள், சேவல்கள் காணிக்கையாக்கப்பட்டு நேர்த்திகள் நிறைவேற்றப்படும் என்பதுடன் சுகாதார விதிமுறைகளுக்கு அமைவாகவே வேள்விப் பொங்கல் இடம்பெறவுள்ளது.

**விளம்பர அனுசரணையாளர்கள்:**

தர்மகர்த்தா
தொடர்புகளுக்கு: 076 404 3803

சாரங்கன் உணவகம்
நகுலேஸ்வரா வீதி, கீரிமலை.
076 546 0149

பிரகலாத் & அருண் பல்பொருள் வாணிபம்
நகுலேஸ்வரா வீதி, கீரிமலை.
077 395 7583

Abi cakes
நகுலேஸ்வரா வீதி, கருகம்பனை.
077 577 4800

ஐஸ்வர்யா சைவ உணவகம்
நகுலேஸ்வரா ஆலய முன்றல், கீரிமலை.
075 452 3611

நாச்சிமார் கட்டிடபொருள் விற்பனைநிலையம்
மெய்கண்டான் வீதி, இளவாலை.
077 621 7464

மாயவன் ஹாட்வெயார்
பிரதான வீதி, இளவாலை.
077 271 4900

சவீனன் சவுன்ஸ் & ஒளி அமைப்பு
சித்திரமேழி, இளவாலை.
077 353 4626

அம்பிகை திருமண சேவை
வடலியடைப்பு, பண்டத்தரிப்பு.
077 176 5251

அம்பாள் கிறேசர் & நரசிங்க வைரவர் ரான்ஸ்போட்
மயிலங்கூடல், இளவாலை.
077 495 4903

சத்யா மல்ரி சென்ரர்
நகுலேஸ்வரா வீதி, கருகம்பனை.
077 716 9055

ஶ்ரீ துர்க்கா அரைக்கும் ஆலை
கருகம்பனை சந்தி, கருகம்பனை.
077 614 0907

ஓம் மல்ரி சென்ரர்
மகாஜனக் கல்லூரி முன்பாக, தெல்லிப்பளை.
076 708 4466

கே.கே.எஸ் ஐங்கரன் குளிரகம்
கே.கே.எஸ் காங்கேசன்துறை.
077 935 2707

விநாயகர் விவசாய களஞ்சியம்
அம்பனை சந்தி, தெல்லிப்பளை.
077 945 5946

ஓவியா பல்பொருள் வாணிபம்
மயிலங்கூடல், இளவாலை.
077 606 6053

சாயிராம் இஞ்சினியரிங்
நகுலேஸ்வரா வீதி, கருகம்பனை.
077 727 9205

நியூமற்ஸ் அக்கடமி
வைத்தியசாலைக்கு அருகாமை, இளவாலை.
077 368 1149

சந்நிதியான் பிறின்டேர்ஸ்
கே.கே.எஸ் வீதி மல்லாகம், தெல்லிப்பளை.
077 360 5009

ஶ்ரீ துர்க்கா மல்ரி சொப்
கே.கே.எஸ் வீதி, தெல்லிப்பளை.
077 362 8810

நந்தன் ஸ்ரோஸ்
மடத்தடி, கொல்லங்கலட்டி.
076 736 7780

நீதன் றில்லிங்
மயிலங்கூடல், இளவாலை.
077 749 4840

Green Super Market
மல்லாகம் சந்தி அருகாமை.
077 779 0390


VSP ரான்ஸ்போட்
கொல்லங்கலட்டி.
077 518 9859

துசாகன் ரான்ஸ்போட்
கல்லுப்பிடுங்கி, கொல்லங்கலட்டி.
077 431 5350

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதம்

## நடிகர் ஷாருக்கான் வைத்தியசாலையில்



(டில்லி)

பிரபல நடிகர் ஷாருக் கான் அஹமதாபாத்தில் உள்ள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

கொல்கத்தா நைட் ரைடர்ஸ் மற்றும் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணிகளுக்கு இடையிலான போட்டியின் போதே அவர் "வெப்ப வாதத்தால்" பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் அவரது உடல் நிலை தற்போது சீராக உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. (நி-6)

## நைஜீரியாவில் துப்பாக்கிச் சூடு 40 பேர் உயிரிழப்பு

(நைஜீரியா)

நைஜீரியாவின் வட, மத்திய பகுதியில் ஆயுதமேந்திய குழு ஒன்று நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 40 பேர் உயிரிழந்துள்ளதுடன் பலர் காயம் அடைந்துள்ளதாகவும் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதேவேளை, துப்பாக்கிச் சூடு நடத்திய ஆயுதக்கும்பல் அங்கிருந்து தப்பி சென்றுள்ளதாகவும் தகவல் அறிந்து அங்குச் சென்ற பொலிஸார் காயம் அடைந்தவர்களை மீட்டு வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

எனினும், இந்த தாக்குதலுக்கு இதுவரை எந்தக் குழுவும் பொறுப்பேற்கவில்லை எனவும் இந்த பிராந்தியத்தில் நாடோடி மற்றும் கிராம விவசாயிகளுக்கு இடையே நீர், நிலம் தொடர்பாக பிரச்சினை இருந்து வருவதால் இருதரப்புக்கு மோதல் ஏற்பட்டு வன்முறை சம்பவங்களும் நடத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இதுபோன்ற தாக்குதல் கடந்த டிசம்பர் மாதம் நடத்தப்பட்டிருந்ததுடன் தாக்குதலில் 140 பேர் கொல்லப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## தாய்வானைச் சுற்றி சீனா திடீர் போர்ப்பயிற்சி

(தாய்வான்)


தாய்வானை தனது நாட்டின் ஒரு பகுதி என்று சீனா உரிமை கொண்டாடி வருகிறது. இதற்கு தாய்வான் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகிறது. இவ்விவகாரத்தில் தாய்வானுக்கு ஆதரவாக அமெரிக்கா உள்ளது.

தாய்வானை மிரட்டுவதற்காக அந்நாட்டை சுற்றி சீனா போர்ப் பயிற்சியில் ஈடுபடுகிறது. இதற்கிடையே தாய்வானின் புதிய ஜனாதிபதியாக வில்லியம் லாய் சீமீ பத்தில் பதவியேற்ற நிலையில் அந்நாட்டை சுற்றி சீனா நேற்றுக் காலை திடீரென்று இரண்டு நாள் போர்ப்பயிற்சியை தொடங்கியுள்ளது.

இதுகுறித்து சீன இராணுவ செய்தித் தொடர்பாளர் கூறும்போது, இந்த போர் பயிற்சிகள் பிரிவினைவாத செயல்களுக்கு வலுவான தண்டனையாக இருக்கும்.

கூட்டு கடல்-வான் போர் தயார்நிலை ரோந்து, முக்கிய இலக்குகள் மீது துல்லியமான தாக்குதல்கள், படைகளின் கூட்டு உண்மையான போர் திறன்களை சோதிக்க தீவிற்கு உள்ளேயும் வெளியேயும் ஒருங்கிணைக்கப்பட்ட நடவடிக்கைகளில் கவனம் செலுத்தப்படுகிறது. தாய்வான் படைகளின் பிரிவினைவாதச் செயல்களுக்கு இது ஒரு வலுவான தண்டனை மற்றும் வெளி சக்திகளின் தலையீடு ஆத்திரமூட்டலுக்கு எதிரான கடுமையான எச்சரிக்கையும் எனத் தெரிவித்தார். (நி-6)

# பாலஸ்தீனத்தை அங்கீகரி



கடும்

(ஜெருசலேம்)

பாலஸ்தீனத்

செய்துள்ளதாக

ஆகிய 3 ஐரோப்

இந்த 3 நாடுக


இஸ்ரேல் திரும்

இது குறித்து நோர்வே பிரதமர் ஜோனாஸ் கார் கூறுகையில், "பாலஸ்தீனத்துக்கு அங்கீகாரம் அளிக்காவிட்டால் மத்திய கிழக்கில் அமைதி ஏற்படாது. தனி நாடாக செயற்படுவதற்கான உரிமை பாலஸ்தீனத்துக்கு உள்ளது. பாலஸ்தீனத்துக்கு அங்கீகாரம் அளிப்பதன் மூலம் அரபு அமைதி திட்டத்திற்கு நோர்வே ஆதரவு அளிக்கிறது" என்று தெரிவித்தார்.

அதே போல் அயர்லாந்து அரசாங்கமும் பாலஸ்தீனத்தை தனிநாடாக அங்கீகரிக்க முடிவு செய்துள்ளது. இது குறித்து அயர்லாந்து பிரதமர் சைமன் ஹாரிஸ் கூறுகையில், "இது அயர்லாந்து மற்றும் பாலஸ்தீனத்துக்கு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நாள்" என்று தெரிவித்தார். மேலும் ஸ்பெயின் அரசு வரும் 28 ஆம் திகதி பாலஸ்தீனத்தை தனிநாடாக அங்கீகரிக்கும் என அந்நாட்டின்

# பிரச்சார மேடை சரிந்து

- 5 பேர் உயிரிழப்பு
- 50 பேர் படுகாயம்
- மெக்சிக்கோவில் துயரம்



(மெக்சிக்கோ)

மெக்சிகோவில் ஜனாதிபதி வேட்பாளர் ஜார்ஜ் அல்வாரெஸ் மைனெஸ் பிரச்சார நிகழ்வில் மேடை சரிந்து விழுந்த விபத்தில் 5 பேர் உயி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...தை தனிநாடாக ...க்க முடிவு
## ...யில் இஸ்ரேல்

**...ம்)** **...த்தை தனிநாடாக அங்கீகரிக்க முடிவு ...ாக ஸ்பெயின், அயர்லாந்து மற்றும் நோர்வே ...ாப்பிய நாடுகளும் தெரிவித்துள்ள அதேவேளை ...டுகளில் இருந்தும் தூதரக அதிகாரிகளை ...நம்பப் பெற்றுள்ளது.**

பிரதமர் பெட்ரோ சான் செஸ் அறிவித்துள்ளார்.

நோர்வே மற்றும் அயர் லாந்தில் இருந்து தங்கள் நாட்டின் தூதுவர்களை திரும்ப பெற்றுக் கொள்வதாக இஸ்ரேல் அறிவித்து ள்ளது.

இது குறித்து இஸ்ரேல் வெளியு றவுத்துறை அமை ச்சர் காட்ஸ் கூறுகையில், "பயங்கரவாத த்திற்கு பலன் இருக்கிறது என்ற செய்தியை அயர்லா ந்து மற்றும் நோர்வே அரசு கள் இந்த உலகிற்கு சொல்ல வருகின்றன. பாலஸ்தீன த்துக்கு அங்கீகாரம் வழங் குவது, காசாவில் அடைக்க ப்பட்டிருக்கும் இஸ்ரேலின் பணயக்கைதிகளை மீட்கும் முயற்சிகளுக்கு இடையூ றாக இருக்கக் கூடும். ஸ்பெ யின் அரசாங்கமும் இதே முடிவை எடுக்குமானால், ஸ்பெயின் நாட்டிற்கான இஸ் ரேலின் தூதுவரையும் திரும் பப் பெறுவோம்" என்று தெரி வித்தார். (நி-6)

## ... விபத்து

...ரிழந்தனர். 50 பேர் படுகாயம டைந்தனர்.

மெக்சிக்கோவில் வரும் ஜூன் 2 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடைபெற உள்ளது.

இந்நிலையில் அந்நாட்டின் வடக்கு மாகாணமான நியூவோ லியோனில் உள்ள சான் பெட்ரோ கார்சா கார்சியா நகரில் நேற்று முன்தினம் பலத்த காற்று வீசி யது.

அப்போது, குடிமக்கள் இயக்கம் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிடும் ஜார்ஜ் அல்வாரெஸ் மைனெஸ் பிரச்சார நிகழ்ச்சிக்காக அமைக்கப்பட்டிருந்த மேடை அமைப்புகள் சரிந்து விழுந்தன.

இந்த இடிபாடுகளில் சிக்கி 5 பேர் உயிரிழந்துள்ளதாகவும், 50 பேர் படுகாயமடைந்துள்ளதாக வும் தகவல்கள் வெளியாகியுள் ளன. (நி-6)

## உலக சாதனை படைத்த உய்யா பறவையின் இறகு

(வெலிங்டன்)

உலகில் அழிவடைந்த பறவையாக கருதப்படும் உய்யா என்ற பறவையின் இறகு உலக சாதனை படை த்துள்ளது.

குறித்த இந்த பறவை யின் இறகொன்று 28,400 டொலருக்கு ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டதன் ஊடாக இந்த உலக சாதனை படைக்கப்பட்டுள் ளது.

மேலும் இந்த ஏல விற்பனையில் 3,000 டொலருக்கு விற்பனை செய்ய முன்னதாக எதிர் பார்க்கப்பட்டதாக சர்வதேச ஊடக தகவல்கள் தெரிவிக் கின்றன.



இருப்பினும் தீர்மா னிக்கப்பட்ட விலையை விடவும் 450 வீத மடங் கில் இந்த இறகு விற் பனை செய்யப்பட்டுள் ளது.

நியூசிலாந்தின் வடக்குத் தீவுக்கு உரிய அழிந்து போன ஒரு பறவையாக இந்த உய்யா பறவை விளங்குகின்றது.

மேலும் உறுதிப்படுத்திய வகையில் கடைசியாக இப்பறைவையைப் பார்த் தது 1907 ஆம் ஆண்டில் ஆகும்.

ஆனால், 1960கள் வரை இப்பறவையைப் பார்த்த தற்கு நம்பத்தக்க சான்றுகள் உள்ளன. (நி-6)

## மறைந்த ஈரான் ஜனாதிபதிக்கு பல்லாயிரக்கணக்கானோர் அஞ்சலி



(டெஹ்ரான்)

ஹெலிகொப்டர் விபத்தில் உயிரிழந்த ஈரான் ஜனா திபதி இப்ராஹிம் ரைசி உள்ளிட்ட 9 பேரின் இறுதி சடங்குகள் தலைநகர் டெஹ் ரானில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இதனைத் தொடர்ந்து குறித்த ஒன்பது பேரினதும் பூதவுடல்கள் டெஹ்ரானின் டவுன்டவுன் வழியாக ஊர் வலமாகக் கொண்டு செல்ல ப்பட்டு ஆசாதி சதுக்கத்தை சென்றடைந்தது.

இறுதி ஊர்வலத்தில் பல் லாயிரக்கணக்கான மக்கள் அலைகடலென திரண்டு அஞ்சலி செலுத்தினர். குறிப் பாக வெளிநாட்டு தலைவர் கள் பலரும் கலந்து கொண்டு உயிரிழந்த ஒன்பது தலை வர்களுக்கும் அஞ்சலி செலு த்தியிருந்தனர். (நி-6)

## பிரித்தானிய பொதுத் தேர்தலுக்கான திகதியை அறிவித்தார் ரிஷி சுனக்



(லண்டன்)

பிரித்தானியாவில் ஜூலை 4 ஆம் திகதி பொதுத் தேர்தல் நடைபெறவுள்ள தாக அந்நாட்டின் பிரதமர் ரிஷி சுனக் அறிவித்துள் ளார்.

நேற்று முன்தினம் இடம் பெற்ற அமைச்சரவை கூட் டத்துக்குப் பின்னரே பிரத மர் ரிஷி சுனக் குறித்த அறி விப்பை வெளியிட்டு இருந் தார்.

44 வயதான ரிஷி சுனக், பிரதமராக முதல் முறை யாக வாக்காளர்களை எதிர் கொள்ளப் போகின்ற தேர் தல் இதுவாகும்.

ஜூலையில் நடைபெற உள்ள குறித்த தேர்தலா னது கடந்த 2016 ஆம் ஆண்டு பிரெக்சிட் வாக்கெடு ப்புக்குப் பின்னர் நடைபெற வுள்ள மூன்றாவது பொதுத் தேர்தல் என்பதும் குறிப்பிட த்தக்கது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிவாரணம் வழங்க

# பாதிப்படைந்த கடற்றொழிலாளர்கள் விபரங்களை திரட்டுங்கள்

### மாவட்ட கடற்றொழில் கிராமிய அமைப்பு

(கரணவாய்)

சீனாவில் இருந்து நிவாரணக் கப்பல் வருவதனால் பாதிக்கப்பட்ட கடற்றொழிலார்களது விவரங்களை உடனடியாக சமர்ப்பிக்குமாறு யாழ்.மாவட்ட கடற் றொழில் கிராமிய அமைப்புக்களின் சம்மேளனத்தின் தலைவர் செல்லத்துரை நற்குணம் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் யாழ்.வட மராட்சி ஊடக இல்லத்தில் இடம் பெற்ற ஊடக சந்திப்பின் போது அவர் இதனை தெரிவித்தார்.

எதிர் வரும் 26 ஆம் திகதி நிவாரணப் பொருட்களை ஏற்றிய கப்பல் கொழும்புத் துறைமுகத்தை வந்தடைய இருக்கின்றது. அந்த நிவாரண பொருட்கள் கடற்றொழில் அமைச்சரின் முயற்சியினால் வட மாகாண கடற்றொழிலாளர்களுக்கு வழங்கப்படவுள்ளது.

அதற்கு முன் ஆயத்தமாக நாங்கள் ஏற்கனவே கூறியபடி பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்களது ஒரு பட்டியலை வெளிக்கொணர வேண்டும். அதற்கு கடற்றொழில் சங்கங்கள் கடற் றொழில் அமைப்புகள் பாதிக்கப்பட்ட வர்களது பட்டியலை முழுப்பெயர், அடையாள அட்டை இலக்கம், கிராம அலுவலர் பிரிவு, விலாசம் ஆகியவற்றை விவரமாக தயாரித்து அந்தப் பட்டியலை கடற்றொழில் அமைச்சர் என்ற முகவரி இட்டு அமைச்சருக்கும் பிரதியை எமது கடற்றொழில் கிராமிய அமைப்புக்களின் சம்மேளனத்திற்கும் சமர்ப்பிக்குமாறும் தெரிவித்தார். (நி-6-60)



கிளிநொச்சி தருமபுரம் பகுதியில் அமைந்துள்ள நமசிவாய முதியோர் இல்லத்தின் சுற்றுச் சூழல் மற்றும் முதியோர் தங்கும் பகுதிகள் கண்டாவளை பிரதேச கிராம சேவையாளர்களால் சிரமதானப்பணி முன்னெடுக்கப்பட்டதுடன் சுகாதார பொருட்கள், படுக்கை விரிப்புகள் உள்ளிட்ட பொருட்களையும் கையளித்துள்ளனர்.

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 150 | 160 | 120-160 |
| உருளைக்கிழங்கு | 200 | 180 | 170 |
| பச்சைமிளகாய் | 80 | 150 | 100 |
| தக்காளி | 180 | 280 | 170 |
| மரவள்ளிக்கிழங்கு | 140 | 150 | 100-130 |
| கோவா | 200 | 200 | 150 |
| கரட் | 280 | 220 | 200 |
| பூசணி | 80 | 100 | 100-120 |
| புடோல் | 280 | 150 | 120 |
| வாழைக்காய் | 100 | 80 | 80-100 |
| சின்ன வெங்காயம் | 350 | 300 | 200-350 |
| பெரிய வெங்காயம் | 200 | 220 | 240 |
| பாகற்காய் | 700 | 600 | 300 |
| வெண்டக்காய் | 200 | 150 | 200-250 |
| கருணைக் கிழங்கு | 150 | 120 | -- |
| பயற்றங்காய் | 500 | 500 | 400 |
| லீக்ஸ் | 350 | 300 | 300 |
| பீற்றூட் | 250 | 600 | 300 |
| கறிமிளகாய் | 200 | 450 | 250 |
| முருங்கைக்காய் | 1100 | 1000 | 700-1000 |
| போஞ்சி | 650 | 600 | 350 |
| கத்தரிதம்புள்ள | 100 | 160 | -- |
| கீரை - 1 பிடி | 120 | 100 | 60-80 |
| தேசிக்காய் | 1300 | 1200 | 800-1000 |
| தேங்காய் (ஒன்று) | 120 | 80 | 60-110 |
| இராசவள்ளி | 450 | 400 | 250 |
| வெங்காயப்பூ | 500 | 400 | -- |
| முள்ளங்கி | 100 | 150 | 80 |
| பொன்னாங்காணி | 100 | 100 | 80 |
| வல்லாரை | 40 | 80 | 70 |
| ஈரப்பலா | -- | 100 | 80 |

## இன்று ஒரு தகவல் 133



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# கடலுக்குள் எரிமலை

1963 ஆம் வருடம் நவம்பர் மாதத்திலே ஒரு நாள் அதிகாலை நேரம். இருள் இன்னமும் சூழ்ந்திருக்கு இன்னமும் சரியாக விடியவில்லை!

ஐஸ்லிவர் 11 என்கின்ற மீன்பிடி படகு கடலிலே போய்க் கொண்டு இருக்கு.

ஜெய்ர் பிரிக்லாஸ்கர் என்கின்ற இடத்திற்கு மேற்கே, 'வெஸ்ட்மான்' என்கின்ற தீவுகளோட தெற்கு முனைக்கு அப்பாலே ஒரு இடம். அங்கே தான் அந்த மீன்பிடி படகு போய்க் கொண்டு இருக்கு. மீன் பிடிக்கிறதுக்காக வலைகளை கடலிலே விரித்து விட்டது. அந்த சமயத்திலே தான் அந்த அதிசயம் நடந்தது!

என்ன ஆச்சு தெரியுமா? திடீர் என்று கடல் அலைகள் எல்லாம் சீறி எழுந்தது. படகு கன்னா பின்னான்னு தள்ளாட ஆரம்பித்தது! படகிலே இருந்த மீனவர்கள் தென் கிழக்கிலே உள்ள கடல் பகுதியைப் பார்த்தார்கள்!அவர்களுக்கு ஒன்றுமே புரியவில்லை! அப்பேற்பட்ட ஆச்சரியம் ஒன்று அங்கே நிகழ்ந்து கொண்டிருந்தது.

கடற் பரப்பிற்கு மேலே புகை சீறி வந்து கொண்டு இருக்கு புகை மட்டுமில்லை... ஆவி, சாம்பல், பாறைத்துண்டுகள் இப்படி என்னெல்லாமோ வந்து கொண்டு இருக்கு. இது எல்லாம் என்ன மெதுவாக வந்து கொண்டு இருக்கு. மிகவும் வேகமாக வருது! கடல் பரப்பிற்கு மேலே நூற்றுக்கணக்கான மீற்றர் உயரத்திற்கு மேலே அது பாட்டுக்கு சர் சர் என்று போயிக்கொண்டு இருக்கு!

அடுத்த 48 மணி நேரத்திலே அந்த இடத்திலே கடல் மேற் பரப்பிலே சின்ன மலை மேடு உருவாகியது! அவ்வளவு தான் அது அப்படியே ஒரு தீவாக ஆகிவிட்டது! அதாவது மீன்பிடிக்கப் போனவங்க... அவர்கள் கண் முன்னாடியே தீவு உண்டானதை பார்த்திருக்கிறார்கள். இது எப்படி நடந்து இருக்கும் என்று நினைக்கிறீர்கள். எரிமலைகள் பூமியிலே தான் இருக்கும் என்று நினைக்காதீங்க கடலுக்கு அடியிலேயும் இருக்கு.

கடலுக்கு அடியிலே இருக்கிற எரிமலையும் வெடிக்கும் சீறும்- குமுறும்! எரிமலைக் குழம்பு பொங்கி கடலுக்கு மேலே வந்து விடும் அது அப்படியே பரவி தீவாக ஆகிவிடுகிறது. இது மாதிரி உண்டாகிற தீவுகள் பொதுவாக நிலைத்து இருக்கிறதில்லை!

காலப் போக்கிலே கடல் அலைகள் அடித்துக்கொண்டு போய்விடும். இருந்த இடம் தெரியாமலே மறைந்துவிடும். ஆனால் இப்போது பேசிக் கொண்டிருந்தோமே அந்தத் தீவு அப்படி ஆவாது போல இருக்கு. ஏன் என்றால் இந்த சம்பவம் நடந்து சரியா மூன்று மாதம் கழித்து மறுபடியும் அதே தீவிலே... முன்னாடி வெடித்த எரிமலை வாய்க்குப் பக்கத்திலேயே இன்னொரு வெடி மலை வெடிச்சது! முன்பு வந்ததை விட அதிகமான எரிமலைக்குழம்பு பொங்கி வந்து விட்டது. அதே தீவிலே மேற்பரப்பிலே பரவி படிந்து அந்தப் பரப்பை இன்னமும் உறுதியாக்கி விட்டது.

1967 இல் எரிமலை சீற்றம் முழுவதுமாக நின்று போய்விட்டது. இன்றைக்கு அது ஒரு அழகான தீவாக இருந்து கொண்டு வருகிறது. அந்த புது தீவிற்கு ஒரு பேரும் வைத்துவிட்டார்கள். 'சர்ட்சி!' இது என்ன பேரு என்கிறீர்களா? இந்த தீவு ஐஸ்லாந்து தென்மேற்கு கடற்கரைக்கு அப்பால் இருக்கிறது. ஐஸ்லாந்திலே ஒரு புராணக்கதை உண்டு. அந்த புராணத்திலே நெருப்பு அரக்கன் ஒருவன் உண்டாம். அவன் பெயர் 'சர்ட்டர்'. அவன் ஞாபகார்த்தமாக இந்த தீவுக்கு 'சர்ட்சி' என்று பெயர் வைத்துவிட்டார்கள்.

புராணக்கதைகளும் அதிலே அரக்கர்கள் வருவதும் நமது ஊரிலே மட்டுமில்லை. எல்லா ஊரிலேயும் இருக்கும் போல இருக்கு. சர்ட்சி தீவிலே ஒரு இயற்கை ஆராய்ச்சிக் கூடம் கூட இருக்குப் போல இருக்கு. உயிர்கள் உருவாகிற விதம் எப்படி என்பதை ஆராய்ச்சி எல்லாம் அங்கே செய்து இருக்கிறார்களாம்.

ஒரு பத்து வருடத்திற்குள்ளே தாவர விதைகள் எல்லாம் கடல் அலையிலே மிதந்து கொண்டே அந்த தீவிற்கு வந்துவிட்டதாம். செடி,கொடிகளும் நிறைய உண்டாகி விட்டதாம். இப்போது அந்த தீவு முன்பு இருந்ததை விட மிகவும் நன்றாக இருக்கின்றதாம்.

போய் பார்த்து விட்டு வரலாம்! ஆசையாகத் தான் இருக்கு! இருந்தாலும் நம்ம போகாத வேளை... நாம் போயி அடி வைத்ததும் அந்தத் தீவே கடலுக்குள்ளே தாழ்ந்து போய் விட்டது என்றால் என்ன செய்வது? நீச்சல் தெரிந்தால் அடித்து புடித்து அடுத்த தீவுக்கு வந்து விடலாம்.

என்ன சார்? நமக்கு அந்த அளவுக்குப் போதாத வேளையா....? என்று நீங்க கேக்கலாம். நான் சும்மா வேடிக்கைக்காக அப்படி சொல்லவில்லை சார். நமது இராசி அப்படித் தான் இருக்கு! அந்த மீனவர்களுக்கு தீவு மேலே எழும்புவதை பார்கின்ற இராசி! நமக்கு...? கட்டின கட்டடம் பூமிக்குள்ளே தாழுவதைப் பார்க்கின்ற இராசி.

கொஞ்ச நாளைக்கு முன்பு பத்திரிகையிலே பார்த்தீர்களே! பெங்களூர்லே ஒரு முழுக் கட்டடம் பூமிக்குள்ளே போய் ஒளிந்து கொண்டது அல்லவா! இன்னமும் கொஞ்ச நாளிலே இங்கே என்ன சார் தேடிக்கொண்டு இருக்கிறீர்கள் என்று கேட்டா அதற்கு ஒன்றுமில்லை சார் இந்த இடத்திலே புது வீடு ஒன்று கட்டியிருந்தேன். அதைக் காணவில்லை! அது தான் தேடிக்கொண்டு இருக்கின்றேன் என்று யாராவது பதில் சொன்னால் கூட அதிலே ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முருங்கன் பகுதியில் யானையின் நடமாட்டத்தால் மக்கள் அச்சம்

(மன்னார்)


மன்னார் முருங்கன் பகுதியில் நேற்றும் காலை இரண்டாவது நாளாகவும் தனித்து காட்டு யானை ஒன்று நடமாடி திரிவதனால் அப்பகுதி மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

எனவே தனித்து திரிகின்ற காட்டு யானையை அங்கிருந்து வெளியேற்ற அரச அதிகாரிகள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் முன்வர வேண்டும் என அருட்தந்தை டெஸ்மன் அஞ்சலோ அடிகளார் கோரிக்கை விடுத்துள்ளார்.

குறித்த விடயம் தொடர்பாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபருக்கு தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் உடனடியாக தீர்வை பெற்றுக் கொள்ளும் வகையில் எதிர்வரும் 30 ஆம் திகதி அதிகாரிகளுடன் கலந்துரையாடி நடவடிக்கைகளை மேற் கொள்ளுவதாக தெரிவித்தார். (நி-6-285)


# கண்ணீர் அஞ்சலி



அமரர். கிறகோரி ஜேசுராஜன்

எமது பாடசாலையின் ஆசிரியை திருமதி.த.யூலி ஆன் அவர்களின் தந்தையார் திரு.கிறகோரி ஜேசுராஜன் அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

தோற்றம் 17.08.1936

மறைவு 21.05.2024

நலன்புரிக்கழகம்
யா/சன்மார்க்க ம.வி.


# நிலவிவரும் சீரற்ற காலநிலை மீன்பிடி நடவடிக்கை பாதிப்பு



(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக நீடித்துவரும் பலத்த காற்றுடன் கூடிய சீரற்ற காலநிலை காரணமாக மீன்பிடி நடவடிக்கை பாதிப்படைந்துள்ளது.

நேற்று முன்தினம் முதல வீசி வரும் அதிக காற்று காரணமாக கடல் அலைகளும் அதிகம் காணப்படுவதனால் மீனவர்கள் தங்கள் மீன்பிடி வள்ளங்கள், வலைகள் உட்பட்ட உபகரணங்களை பாதுகாப்பான இடங்களுக்கு நகர்த்தியுள்ளனர்.

அதேவேளை தாழ்வுபாடு, சௌத்பார், பேசாலை மீனவர்கள் சீரற்ற கால நிலை காரணமாக மீன்பிடி நடவடிக்கையை தவிர்த்துள்ளனர்

அதேநேரம் காற்றின் வேகம் காரணமாக கரையோர பகுதிகளில் அமைக்கப்பட்டி ருக்கும் மீனவர் வாடிகளும் சேதமாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6-285)

# வெசாக்கை முன்னிட்டு 3 கைதிகள் வவுனியாவில் விடுதலை

(குருமன்காடு)

வெசாக் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு வவுனியாவில் 3 கைதிகள் நேற்று விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

வெசாக் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு அரசியலமைப்பின் 34 ஆவது சரத்தில் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் பொது மன்னிப்பின் அடிப்படையில் நாடளாவிய ரீதியில் 10 பெண் கைதிகள் உட்பட 278 கைதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

அதனடிப்படையில் சிறு குற்றங்கள் மற்றும் தண்டப் பணம் செலுத்தாமை போன்ற குற்றங்களுக்காக வவுனியா விளக்கமறியல் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 3 கைதிகள் விடுவிக்கப்பட்டனர்.

வவுனியா சிறைச்சாலை அத்தியட்சகர் கே.ஏ.எஸ். அபயரட்ண மற்றும் சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் குறித்த கைதிகளுக்கு ஆலோசனை வழங்கி அவர்களை விடுதலை செய்து வழியனுப்பி வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6-250)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3124


வனாந்தகன்




சாதுரி




சுகன்யா





பதுமிதன்




வனேஷ்




துஷானி




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பாகம் - 2
# பொன்னியின் செல்வன்
## காவியத் தொடர் 489





"இளவரசே! இது என்ன காரியம்! இந்தக் கொந்தளிக்கும் கடலில் படகு எப்படிச் செலுத்த முடியும்? எரிகின்ற கப்பலில் உள்ளவனை எப்படிக் காப்பாற்ற முடியும்? ஆனாலும் முயற்சி செய்து பார்க்கலாம் தாங்கள் போகவேண்டாம். போவதற்கு எங்களில் எத்தனையோ பேர் இருக்கிறார்கள்" என்றான் பார்த்திபேந்திரன்.

"ஜாக்கிரதை! இச்சமயம் என்னைத் தடுக்கப் பார்க்கிறவர்களை நான் ஒரு நாளும் மன்னிக்க முடியாது" என்று இராஜகம்பீரமான அதிகார தோரணையில் கூறினார் இளவரசர். அதே சமயத்தில் படகை அவிழ்த்துவிட்டார். "உங்களில் இரண்டு பேர் போதும் வாருங்கள்!" என்றார்.

படகு கடலில் இறங்கியது. இளவரசர், அவர் குறிப்பிட்ட இருவரும் அதில் குதித்தார்கள். மறு கணமே படகு கப்பலை விட்டு அகன்று சென்றது. அலைகளின் மேல் ஆவேசக்கூத்து ஆடியது. இளவரசரும் மற்ற இருவரும் துடுப்புகளைப் பலங்கொண்ட மட்டும் வலித்தார்கள். சிறிது சிறிதாகப் படகு எரிகின்ற கப்பலை அணுகியது. இதற்குள் தீ உச்சியிலிருந்து பாதி பாய்மரம் வரையில் இறங்கி விட்டிருந்தது. ஆனால் வந்தியத்தேவனோ அங்கே நின்று கொண்டிருந்தான். அவன் தீயின் வெளிச்சத்தில் கப்பலைப் பார்த்தான் கப்பலிலிருந்து இறக்கப்பட்டு வந்த படகையும் பார்த்தான். அந்த அதிசயத்தில் தன்னை மறந்திருந்தான். தான் ஏதேனும் செய்ய வேண்டும் என்றே அவனுக்குத் தோன்றவில்லை.


"குதி கடலில் குதி!" என்று கத்தினார் இளவரசர். அவன் காதில் அது விழவில்லை. செயலற்ற பதுமையைப் போல் நின்று கொண்டிருந்தான். ஆயிற்று இன்னும் சிறிது நேரம் தாமதித்தால் கப்பல் அடித்தளத்திற்கு நெருப்பு வந்துவிடும் கப்பல் முழுகிவிடும். அப்புறம் அவனைக் காப்பாற்றுவது இயலாத காரியமாகி விடும்.

என்ன செய்யவேண்டும் என்பதை மறுபடியும் இளவரசர் ஒரு நொடியில் முடிவு செய்தார். இத்தகைய சந்தர்ப்பங்களுக்கென்று அந்த அபாயப் படகில் சேர்த்துக் கட்டியிருந்த நீளக்கயிற்றின் இன்னொரு நுனியைத் தமது இடுப்பில் சுற்றி இறுக்கிக் கட்டிக் கொண்டார். மாலுமிகள் இருவருக்கும் எச்சரிக்கை செய்துவிட்டுக் கடலில் குதித்தார். இத்தனை நேரம் படகுடன் விளையாடிய அலைகள் இப்போது இளவரசருடன் விளையாடின. ஒரு கணம் அவரை வானத்துக்கு உயர்த்தின் மறு கணம் பாதாளத்தில் தள்ளின. எனினும் இளவரசர் திசையும் குறியும் தவறாமல் எரிகின்ற கப்பலை நோக்கி வேகமாகப் போய்க் கொண்டிருந்தார்.

ஒரு பெரிய, மிகப் பெரிய அலை வந்தது! இளவரசர் மேலே அது விழுந்திருந்தால் அவரை அமுக்கிக் கடலின் அடியில் கொண்டு போயிருக்கக் கூடும்! ஆனால் அது நல்ல அலை இளவ ரசருக்கு ஏவல் செய்ய வந்தது. அவரைத் தன் உச்சியில் வைத்துக் தூக்கிக் கொண்டு போய் எரிகின்ற கப்பலின் மேல் தளத்தில் எறிந்தது.

ஏற்கெனவே கட்டு அவிழ்த்துக் கொண்டிருந்த வந்தியத்தேவன் இளவரசரைப் பார்த்ததும், 'ஆ' என்று அலறி அவரை எடுப்பதற்காகத் தாவிக் குனிந்தான். இளவரசர் அவனுடைய கழுத்தை அப்படியே இறுக்கிக் கட்டிக் கொண்டார். அவன் காதுக்குள் "என்னைப் பிடித்துக் கொண்டு வா! விட்டு விடாதே!" என்றார். சொல்லி முடிந்த தட்சணமே இருவரும் மறுபடியும் கடலில் மிதந்து அலைகளினால் மொத்துண்டார்கள்.

மாலுமிகள் துடுப்புத் தள்ளுவதை நிறுத்திக் கயிற்றைப் பிடித்து இழுக்கலானார்கள். இளவரசரும் அவரை உடும்புப் பிடியாகப் பிடித்துக் கொண்டிருந்த வந்தியத்தேவனும் படகை அணுகினார்கள். (தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## பிரம்மராட்சஷன்



(நேற்றைய தொடர்ச்சி..)

"சரி! அதற்கு அவர்கள் என்ன பதில் சொல்வார்களாம் பாட்டி!"

"இமயமலை என்பார்களாம்!"

"அது சரியான பதில் இல்லையா?"

"ஆம்... பிரம்மராட்சஷன் அடுத்ததாக இரண்டாவது கேள்வியான நல்லதை விட தீமையே அதிகம் செய்யும் சிறிய வஸ்து எது?" என்று கேட்கும்.

"பாம்பின் விஷம் சிறிதாக மருந்துக்கு பயன்படுகிறது. ஆனால், மரணம் விளைவிக்கவே அதிகமாக பயன்படுகிறது!" என்பர்.

"அந்த பதிலும் சரியில்லை என்று சொல்லிவிடுமா?"

"ஆமாம்... மூன்றாவது கேள்வியாக உருண்டு வேகமாக ஓடுவது எது?" என்று கேட்கும்.

"அதற்கு என்ன பதில் சொல்வார்கள்?"

"வண்டிச்சக்கரம், பணம் என்று சொல்வர்". இந்த பதில்கள் பிரம்மராட்சஷனுக்கு திருப்தி அளிக்காது. உடனே அவர்கள் தலையை கிள்ளி எடுத்து மரத்தில் தொங்க விட்டு விடும். சுடலை... நாம் இங்கிருப்பது ஆபத்தை விளைவிக்கும். வா... போய் விடலாம்," என்று அவனது கையை பிடித்தாள் பாட்டி ராமாயி.

ஆலமரம் அருகில் சென்றான் பேரன். கால்களை அகல விரிந்து பலமாக ஊன்றி இடுப்பின் இருபுறமும் கைகளை பதித்து பெருங்குரலில், "ஏ... பிரம்மராட்சஷா... உன் கேள்விகளுக்கு பதில் சொல்ல வந்திருக்கிறேன். வா... வெளியே... கேள் உன் கேள்விகளை!" என்று கூறினான்.

"யாரடா சிறுவன் என் கேள்விகளுக்கு பதில் சொல்ல தோள் தட்டி வந்திருப்பது?" என்றபடி ஆலமரத்தில் இருந்து வெளி வந்த பிரம்மராட்சஷன், சிறுவன் பயப்படட்டும் என்று தலைகள் தொங்கும் ஆலமரக் கிளைகளை உக்கிரமாக ஆட்டியது. அது புயல் வீசுவது போல பயங்கரமாக இருந்தது.

அதை கண்டு அஞ்சவில்லை. "ஏ... பிரம்மராட்சஷா... உன் உருவம் கண்டு எள்ளி நகையாடாதே... கேள் உன் கேள்விகளை?" என்றான்.

"சாவதென்று வந்து விட்டாய்... உன் விதியை யாரால் மாற்ற முடியும்? என் முதல் கேள்வி இது தான். உலகிலேயே பெரியது எது?" என்று ஆலமரத்து கிளைகளை பயங்கரமாக ஆட்டியபடி கேட்டது.

"உலகில் பெரியது அன்பு," என்றான்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைதியின் உண்மைச் சொரூபம் மனதில் இருந்து வெளிப்படும்போது அன்பின் உணர்வும் தானே வெளிப்படும். ~ யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## புளியமரத்துப் பேய் போலதான் இலங்கையின் அரசியலும்

அந்தக் காலத்தில் ஊர்களில் பேய்க்கதைகள்தான் முதன்மை பெற்றிருந்தன.

ஆம், முன்னைய காலத்தில் உழைப்பு என்பதைவிட, பொழுதுபோக்கும் ஊரவர்கள் கூடியிருந்து கதைப்பதுமே நீண்ட நெடுநேரத்தை ஆட்கொண்டிருந்தன.

அவ்வாறான கதைகள் மனித வாழ்வுக்கு எந்தப் பிரயோசனமும் இல்லாதவை. ஊரின் கோடியில் இருக்கின்ற புளியமரத்தில் பேய் இருக்கிறது எனத் தொடங்கும் அந்தக் கதையால் அந்தக் கிராமமே உறைந்து போயிருக்கும்.

புளியமரத்துப் பேய்க்கதையால் குறுந்தூரப் பாதைகளை விடுத்து நெடுந்தூரம் சுற்றி அலைந்த சம்பவங்களும் உள்ளன.

தவிர, புளியமரத்துப் பேய் அந்த ஊரின் உழைப்பு, முயற்சி, படிப்பு என அத்தனையையும் பாழாக்கிவிட்டதும் உண்டு.

இப்போதெல்லாம் அந்தப் பேய்க்கதைக்கே இடமில்லை.

எங்கும் மின்சார ஒளி, தகவல் தொடர்பாடல் வசதிகள், பொழுதுபோக்குவதற்கும் கூடியிருந்து கதைப்பதற்கும் நேரம் இல்லை என்றபோது, புளியமரத்துப் பேயும் இல்லாமல் போக வேண்டியதாயிற்று.

காலம் மாறி அறிவு பெருகி, உலகத் தொடர்பாடல் பரவியபோது மூடநம்பிக்கைகளும் சோம்பேறித்தனங்களும் இல்லாது போயின என்பதுதான் உண்மை.

எனினும் எங்கள் நாட்டு அரசியலில் இன்னமும் புளியமரத்துப் பேய்க்கதைகள் தொடர்வதுதான் வேதனைக்குரியது.

உண்மை. இலங்கை அரசியலில் இன்னமும் தெளிவும் வெளிப்படைத்தன்மையும் ஏற்படவில்லை.

அரசியல் சார்ந்த பேச்சுக்கள் இன்னமும் புளியமரத்துப் பேய்க்கதை போலவே நகருகின்றன.

இதற்கு நல்ல உதாரணம், இலங்கையில் நடைபெறவிருப்பது ஜனாதிபதித் தேர்தலா? பொதுத் தேர்தலா? என்ற விவாதமாகும்.

உலகின் இன்றைய சமகால சூழ்நிலையில் கடின உழைப்பிலும் புதிய முயற்சிகளிலும் ஆய்வுகளிலும் பொருளாதார முதலீடுகளிலும் ஈடுபட வேண்டிய தேவையுள்ளது.

அதிலும் இது விடயத்தில் இலங்கை இன்னமும் கடுமையாகப் பாடுபட வேண்டும்.

ஆனால் அதுபற்றிய சிந்தனைகள் எதுவுமில்லாமல், அடுத்து ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுமென ஒரு தரப்புக் கூற, இன்னுமொரு தரப்பு; இல்லை பொதுத் தேர்தலே நடக்கும் எனக் கூறும்.

இப்படியே அந்தத் தேர்தலா? இந்தத் தேர்தலா? என நீண்டகாலம் விவாதிக்க வேண்டிய தேவை எதற்கானது என்பதுதான் புரியவில்லை.

இதில் விசித்திரமென்னவெனில், சில அமைச்சர்கள் கூட இனி பொதுத் தேர்தல்தான் நடக்கும் எனக் கூறுவதுதான்.

# உலகம் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தேரவாத பௌத்தத்தில் தீர்வு உண்டு

### ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

(கொழும்பு)

விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்பத்துடன் வேகமாக முன்னேறும் உலகம் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தேரவாத பௌத்தத்தில் தீர்வு இருப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

மாத்தளை தர்மராஜா பிரிவேனா விகாரையில் நேற்று அரச வெசாக் விழா இடம்பெற்றது. மற்றவர்கள் செய்ததை அன்றி தான் செய்தவற்றைப் பற்றி கவனம் செலுத்துவோம் என்ற தொனிப்பொருளில் இந்த வெசாக் விழா நடைபெறுகிறது.

குறித்த நிகழ்வில் இலத்திரனியல் தொழில்நுட்பத்தின் ஊடாக கலந்துகொண்டு உரையாற்றிய போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, இன்று உலகம் மூடநம்பிக்கையிலிருந்து விலகிச் செல்கிறது. அறிவியலில் அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. புதிய தொழில்நுட்பத்தால், பல நூற்றாண்டுகளாக நமது வாழ்க்கை முறை முற்றிலும் மாறி வருகிறது.

மருத்துவத் துறையும் தொழில்நுட்பத் துறையும் வளர்ச்சியடைந்துள்ளன.

அதேநேரம், வானவியல் பற்றிய புதிய அறிவு மற்றும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் மூலம் பெறப்பட்ட அறிவின் வளர்ச்சியுடன், நாம் இன்னும் பல சிக்கல்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. ஆனால் தேரவாத பௌத்தத்தைப் பின்பற்றுபவர்களுக்கும் அதன் உண்மையான அர்த்தத்தை அறிந்தவர்களுக்கும் இது ஒரு பிரச்சினையல்ல. தேரவாத பௌத்தத்தின் ஊடாக இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் என்றார். (ம-7)

# சந்நிதியான் ஆச்சிரம வைகாசிப் பெருவிழா

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு சந்நிதியான்ஆச்சிரமத்தின் வருடாந்த வைகாசி பெருவிழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9:00 மணியளவில் இடம்பெறவுள்ளது.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளின் ஆசியுடன் ஸ்ரீ செல்வச் சந்நிதி ஆலய காலை பூஜை வழிபாட்டினை தொடர்ந்து ஆரம்பமாகும் இந்நிகழ்வில் பல்வேறு கலை, கலாசார நிகழ்வுகளும் "நவீன தொலைத் தொடர்பு சாதனங்கள் மனித வாழ்விற்கு வாழ்வளிக்கின்றது வாழ் வளிக்கவில்லை" எனும் தலைப்பில் சொல்லின் செல்வர் இரா. செல்வவடிவேல் நடுவராக பங்கேற்கும் சிறப்புப் பட்டிமன்றமும் இடம்பெறவுள்ளது. (ம-7)

# கதிர்காம கந்தனின் ஆடிவேல் உற்சவத்திற்கான பந்தக்கால் நாட்டும் நிகழ்வு இன்று

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற கதிர்காம கந்தன் ஆலயத்தின் வருடாந்த ஆடிவேல் உற்சவத்தின் பந்தல்கால் நடும் நிகழ்வு இன்று அதிகாலை இடம்பெறவுள்ளது.

அதன் பிரகாரம் கதிர்காம கந்தன் ஆலயத்தின் பஸ்நாயக்க நிலமே டிஷான் குணசேகர தலைமையில் நேற்று அதிகாலை, பழங்கால முறைப்படி வெட்டப்பட்ட கம்புகள், மாணிக்க கங்கையில் நீராட்டப்பட்டு, நேற்று இரவு வள்ளி அம்பாள் திருக்கோவிலில் வைக்கப்பட்டுள்ளது.

இன்று காலை சுப முகூர்த்தத்தில் வள்ளி அம்மன் ஆலயத்திலிருந்து கந்தன் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு கதிர்காமம் பெரிய ஆலயத்தில் இக்கன்னிக்கால் அதிகாலையில் நிலமே முன்னிலையில் பக்தி பூர்வமாக பாரம்பரிய கலாசார மரபு முறைப்படி நாட்டப்படும்.

இவ் ஆண்டுக்கான வருடாந்த ஆடிவேல் திருவிழாவானது ஜூலை 06ஆம் திகதி ஆரம்பமாகி, ஜூலை 21ஆம் திகதி மஹா பெரஹெரா இடம்பெற்று, ஜூலை 22ஆம் திகதி காலை மாணிக்க கங்கையில் நீர் வெட்டும் சடங்குடன் நிறைவடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

# குருநாகலில் ஆண் ஒருவர் சடலமாக மீட்பு

குருநாகல், கொகரெல்ல பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பல்லம வாவிக்கு அருகிலிருந்து ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக கொகரெல்ல பொலிஸார் தெரிவித்தனர்.

கொகரெல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 46 வயது நபரொருவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவரது சடலம் பிரேதப் பரிசோதனைக்காக குருநாகல் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கொகரெல்ல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

# மின்சாரம் தாக்கி ஒருவர் மரணம்

(கம்பளை)

கெபித்திகொல்லேவ பொலிஸ் பிரிவிற்குட்பட்ட யாகாவெவ பகுதியில் மின்சாரம் தாக்கியதில் 36 வயதுடைய ஒருவர் உயிரிழந்துள்ளார்.

வனவிலங்குகளை வேட்டையாடுவதற்காக சட்டவிரோதமாக இணைக்கப்பட்டிருந்த மின்சார கம்பியிலிருந்து மின்சாரம் பாய்ந்து அவர் உயிரிழந்ததாக பொலிஸார் நடத்திய விசாரணையில் தெரிய வந்துள்ளது.

கெபித்திகொல்லேவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(ம-7)

### மின்பிறப்பாக்கியிலிருந்து வெளியேறிய

# நச்சுவாயுவை சுவாசித்த தந்தை, மகன் உயிரிழப்பு

(புபுரஸ்ஸை)

புபுரஸ்ஸ பகுதியில் மின்பிறப்பாக்கி இயந்திரத்தை இயக்கிவிட்டு நித்திரைக்குச் சென்ற தந்தை, மகன் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ள குறித்த சம்பவத்தில் புபுரஸ்ஸ நெஸ்டா பகுதியைச் சேர்ந்த 40 வயதுடைய தந்தையும், 17 வயதுடைய அவரது மகனுமே உயிரிழந்துள்ளனர்.

விசாக பூரணை தினத்தை முன்னிட்டு புபுரஸ்ஸ நகரில் தன்சல் நிகழ்வை நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போது குறித்த பகுதியில் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து மின்பிறப்பாக்கி இயந்திரத்தை இயக்கிவிட்டு குறித்த தந்தையும், மகனும் நித்திரைக்குச் சென்றுள்ளனர்.

இந் நிலையில் மின்பிறப்பாக்கி இயந்திரத்தில் இருந்து வெளியேறிய காபன்மொனக்சைட் என்ற நச்சுத்தன்மையுடைய வாயுவை சுவாசித்ததனாலேயே இருவரும் உயிரிழந்துள்ளதாக புபுரஸ்ஸ பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-7)

# ரயிலுடன் மோதுண்டு மூவர் உயிரிழப்பு

மோட்டார் சைக்கிளில் பயணித்த மூவர் ரயிலுடன் மோதுண்டு உயிரிழந்துள்ளனர்.

காலி - பூஸ்ஸ, பிந்தலிய ரயில் கடவையில் நேற்று இந்த விபத்து நேர்ந்துள்ளது.

மருதானையிலிருந்து மாத்தறை நோக்கி பயணித்த ரயிலுடனேயே மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தில் 17 முதல் 19 வயதுக்குட்பட்டவர்களே உயிரிழந்துள்ளதாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில், விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்தனர். (ம-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வர்த்தகத் துறை மாணவர்களுக்கான உயர்கல்வி வாய்ப்புக்கள் ஓர் பார்வை

முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை.

திரைகடலோடியும் திரவியம் தேடு என்ற ஔவையின் வாக்குக்கு அன்றும் இன்றும் செயல் வடிவம் வழங்கும் முக்கியமான துறையே வர்த்தகம் ஆகும். காற்றுப் புக முடியாத இடங்களிலும் புகுந்து தன்னை நிலை நிறுத்தும் ஆற்றல் வர்த்தகத்துக்கு உள்ளது என்பர் அறிஞர்கள். மனிதனது தேவைகளையும் விருப்பங்களையும் நிறைவேற்றும் பொருட்டு பொருட்கள் மற்றும் சேவைகளைப் பரிமாற்றம் செய்வதனுடன் தொடர்புடைய அனைத்து செயற்பாடுகளையும் உள்ளடக்கியதே வணிகம் ஆகும். இன்றைய அனைத்துப் பொருளாதாரங்களிலும் இன்றியமையாதவொரு துறையாக இது விளங்குகின்றது.

இந்த வகையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடத்தின் வெள்ளி விழா செயற்பாடுகளின் ஓர் அங்கமாக மாணவர்களிடையே வர்த்தகத் துறை தொடர்பான விழிப் புணர்வினை ஏற்படுத்து வதனை நோக்கமாகக் கொண்டு இக்கட்டுரை யானது வெளி வருகின் றது. வர்த்தகத் துறை சார் மாணவர்கள் அதிகளவிலான பல் கலைக் கழகங்கள் சார் உயர் கல்வி வாய்ப்புக்களைக் கொண்டுள்ளனர். ஆயி னும் மாணவர்கள் மத் தியில் இது தொடர்பான போதிய விழிப் புணர்வு இல்லாதிருப்பது துரதிர்ஷ்டவசமானதாகும். இதே போன்று இத்துறை சார் மாணவர்கள் சிறந்த தொழில் வாய்ப்புக்களையும் கொண்டுள்ள னர் என்பது குறிப்பிடத்தக்கது.

இக்கட்டுரையானது வர்த்தகத் துறை சார் மாணவர்களுக்கான பல்கலைக்கழகங்கள் சார் உள்வாரியான கற்கை வாய்ப்புக்கள், பல்கலைக்கழகங்கள் சார் வெளிவாரி ரீதியான கற்கை வாய்ப்புக்கள் மற்றும் தொழில் சார்கற்கை வாய்ப்புக்கள் என்பன பற்றிய விவரங்களைத் தொகுத்து வழங்குகின்றது. அத்துடன் வர்த்தகத் துறைசார் மாணவர்களுக்கான எதிர்கால தொழில் வாய்ப்புக்கள் பற்றிய தகவல்களையும் வழங்குகின்றது.

**பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழான பல்கலைக்கழகங்களில் உள்வாரியான பட்டப்படிப்புக்கள்**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பல்கலைக்கழக அனுமதி நடைமுறைகளின் கீழான பல்கலைக்கழகங்கள் சார் உள்வாரியான முழு நேர அடிப்படையிலான பின்வரும் கற்கை நெறிகள் வர்த்தகத் துறைசார் மாணவர்களுக்கான வாய்ப்புக்களாக விளங்குகின்றன.

**முகாமைத்துவம் மற்றும் வணிகம் சார்ந்த் பிரதானமான கற்கைநெறிகள்**

பாரம்பரியமான வணிகம் மற்றும் முகாமைத்துவக் கற்கைகள் தொடக்கம் ஆதன முகாமைத்துவம் மற்றும் வங்கியியல் போன்ற சிறப்புத் துறைகள் வரை இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்கள் சிறந்த கல்வி வாய்ப்புகளை வழங்குகின்றன.

இலங்கையில் உள்ள பல்கலைக் கழகங்களான யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், கொழும்புப் பல்கலைக்கழகம், பேராதனைப் பல்கலைக்கழகம், ஸ்ரீ ஜெயவர்தனபுர பல்கலைக்கழகம், களனிப் பல்கலைக்கழகம், ருகுணப் பல்கலைக்கழகம், கிழக்குப் பல்கலைக்கழகம், தென்கிழக்குப் பல்கலைக்கழகம், ரஜரட்ட பல்கலைக்கழகம், சப்ரகமுவ பல்கலைக்கழகம், மற்றும் வயம்ப பல்கலைக்கழகம் என்பன முகாமைத்துவம், வணிகவியல், முகாமைத்துவம் (பொது) சிறப்பு பட்டத்தையும், ஆதன முகாமைத்துவம் மற்றும் மதிப்பிடல் போன்ற கற்கை நெறிகளை வர்த்தகப் பிரிவு மாண வர்களுக்கு பிரத்தியேகமாக வழங்குகின்றன.



வர்த்தகத் துறை மாணவர்களுக்கான பிரத்தியேகமான கற்கை நெறிகளுக்கு அப்பால் ஏனைய துறைமாணவர்களும் கற்கக்கூடிய வகையில் வவுனியா பல்கலைக் கழகம் மற்றும் திருகோணமலை வளாகம் என்பவற்றினால் முகாமைத்துவக் கற்கைகள் கற்கை நெறி வழங்கப்படுகின்றது. இங்கு வவுனியா பல்கலைக்கழகத்தக்குத் தெரிவு செய்யப்படும் மாணவர்களில் 60 வீதமானவர்களும் திருகோணமலை வளாகத்திற்கு தெரிவு செய்யப்படுபவர்களில் 40 வீதமானவர்களும் வர்த்தகத் துறையிலிருந்து தெரிவு செய்யப்படுவார்கள்.

வர்த்தகம் மற்றும் முகாமைத்துவம் ஆகிய பாரம்பரிய கற்கைகளுக்கு அப்பால், இலங்கைப் பல்கலைக்கழகங்கள் தொழில்துறை சார் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் பிரத்தியேகமான கற்கை நெறிகளை வழங்குவதில் சிறந்து விளங்குகின்றன. அந்த வகையில் வர்த்தகத் துறை மாணவர்களுக்காக ஸ்ரீ ஜெயவர்தன பல்கலைக் கழகத்தினால் வியாபார தகவல் முறைமைகள் (சிறப்பு) பட்டமும், களனிப் பல்கலைக் கழகத்தினால் கணக்கியல் தகவல் முறைமைகள் - வணிக முகாமைத்துவ பட்டமும் வவுனியாப் பல்கலைக்கழகத்தினால் வங்கியியல் மற்றும் காப்புறுதி வியாபார முகாமைத்துவ சிறப்பு பட்டமும் வழங்கப்படுகின்றன.

இந்த மதிப்புமிக்க கற்கை நெறிகளில் அனுமதியினைப் பெறுவதற்கு, மாணவர்கள் குறிப்பிட்ட தகுதி அளவுகோல்களை பூர்த்தி செய்ய வேண்டும். பொதுவாக, விண்ணப்பதாரர்கள் க.பொ.த உயர்தரத்தில் வணிக கற்கைகள், பொருளியல் மற்றும் கணக்கியல் ஆகிய பாடங்களில் ஆகக்குறைந்தது 'S' சித்தியைப் பெற்றிருக்க வேண்டும். இருப்பினும் குறித்த சில கற்கை நெறிகளுக்கு கூடுதல் பாடத் தேவைகள் அல்லது வேறு முன்நிபந்தனைகள் உண்டு என்பதையும் கவனத்தில் கொள்ளல்வேண்டும்.

**வர்த்தகத் துறை மாணவர்களும் கற்கக்கூடிய ஏனைய கற்கைநெறிகள்**

இதுவரை மேலே குறிப்பிடப்பட்ட கற்கை நெறிகள் வர்த்தகத்துறை மாணவர்களுக்காக பிரத்தியேகமாக உருவாக்கப்பட்ட கற்கை நெறிகளாகும். இவற்றுக்கு மேலதிகமாக க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் வர்த்தகப் பிரிவு பாடங்களுக்குத் தோற்றிய மாணவர்கள் பின்வரும் கற்கை நெறிகளுக்கும் அனுமதி கோர முடியும். ஆயினும் அவர்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வருடாவருடம் வெளியிடப்படும் அனுமதிக் கையேட்டில் குறிப்பிடப்படும் அக் கற்கை நெறிகளுக்காகக் கோரப்படும் மேலதிக அனுமதித் தேவைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

அவ்வாறனா கற்கைநெறிகள்: வசதிகள் முகாமைத்துவம் மொரட்டுவப் பல்கலைக்கழகம், விருந்தோம் பல், சுற்றுலா மற்றும் நிகழ்ச்சிகள் முகாமைத்துவம் ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம், உடற்றொழில் கல்வி சப்ரகமுவப் பல்கலைக்கழகம் மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், விளையாட்டு விஞ்ஞானமும் முகாமைத்துவமும் சப்ரகமுவப் பல்கலைக்கழகம் மற்றும் ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக் கழகம், தகவல் தொழில்நுட்பமும் முகாமைத்துவமும் மொறட்டுவப் பல்கலைக்கழகம், தகவல் முறைமைகள் விஞ்ஞான இளமாணி பட்டம் கொழும்புப் பல்கலைக்கழக கணனிக் கல்லூரி, ஸ்ரீ ஜெயவர்த் தனபுரப் பல்கலைக்கழகம் மற்றும் சப்ரகமுவப் பல்கலைக் கழகம், திரைப்படம், தொலைக் காட்சி கற்கைகள் களணிப் பல்கலைக் கழகம், செயற்திட்ட முகாமைத்துவம் வவுனியாப் பல்கலைக்கழகம், தகவலும் தொடர்பாடல் தொழில்நுட்பமும் ரஜரட்ட பல்கலைக்கழகம் மற்றும் வவுனியாப் பல்கலைக்கழகம், உணவு வணிக முகாமைத்துவம் சபரகமுவப் பல்கலைக்கழகம், வியாபார விஞ்ஞானம் மொரட்டுவப் பல் கலைக்கம், நிதிப் பொறி யியல் களணிப் பல்கலைக்கழகம், மனித வள மேம்பாடு ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக் கழகம், சுகாதார சுற்றுலாத்துறை மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவம் கம்பஹா விக்ரமாராச்சி சுதேச மருத்துவ பல்கலைக் கழகம்,

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிளிநொச்சியில்...

முழங்காவில் நோக்கி, மைத்துனரை பின் இருக்கையில் ஏற்றிக் கொண்டு சென்று கொண்டிருந்தபோது மாலை 4.30 மணியளவில் கிளிநொச்சி, கனகபுரம் பகுதியில் இவர்கள் பயணித்த மோட்டார் சைக்கிளை எதிரே வந்த மகேந்திரா ரக வாகனம் மோதி சுமார் 15 மீட்டர் தூரம் இழுத்துச் சென்றது. இதில் இருவரும் மயக்கம் அடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இதில் மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்றவர் இரவு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் புதன்கிழமை பிற்பகல் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இம்மரணம் தொடர்பில் நேற்று வியாழக்கிழமை யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டதன் பின்னர் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. (ம-7,60)

## அல்வாய்...

பயிலும் நிதர்சன் அதிதி (வயது-6) என்ற மாணவியே உயிரிழந்தவராவார்.

திருகோணமலை - வட்டவன் பகுதியில் நேற்று அதிகாலை 2.30 மணியளவில் இந்தக் கோர விபத்து இடம்பெற்றுள்ளது

வடமராட்சி - அல்வாய் மேற்கு, திக்கம் பகுதியைச் சேர்ந்த டயலொக் நிறுவனத்தின் வடக்கு - கிழக்கு பிராந்தியப் பொறியியலாளர் சிவயோகநாதன் நிதர்சன் (வயது-35), அவரது மனைவியான வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் உதவிச் செயலாளர் நிதர்சன் தர்சினி (வயது-35) ஆகிய இருவரும் தமது இரண்டு பிள்ளைகளுடன் காரில் யாழ்ப்பாணத்தில் இருந்து திருகோணமலை ஊடாக மட்டக்களப்பு நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்தவேளை, திருகோணமலை - வட்டவன் பகுதியில் கார் வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்தக் கோர விபத்தில் சிறுமி நிதர்சன் அதிதி (வயது-6) சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். சிறுமியின் சடலம் மூதூர் தள வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

அவரது சகோதரனான நிதர்சன் அதிரேஷ் (வயது-4) என்ற சிறுவன் படுகாயமடைந்த நிலையில் மூதூர் தள வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

விபத்து இடம்பெற்றபோது சிறுமியும், சிறுவனும் காரின் பின் ஆசனத்தில் அமர்ந்திருந்து பயணித்துள்ளனர்.

அதேவேளை, காரைச் செலுத்திச் சென்ற தந்தையும் முன் ஆசனத்தில் அமர்ந்திருந்து பயணித்த தாயும் சிறு காயங்களுடன் உயிர் தப்பியுள்ளனர். (ம-7,60)

ஹந்தஹன HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.05.22
சீட்டிழுப்பு இலக்கம் 0792
வெற்றி இலக்கங்கள்
மகரம் 20 27 55 62 மகரம்
00437
18

## படகுச் சேவை...

வளிமண்டல திணைக்கள கால நிலை அறிக்கை பிரகாரம் இன்று வெள்ளிக்கிழமை கடல் கொந்தளிப்பாக இருக்குமென எதிர்வுகூறப்பட்டதன் காரணமாக குறித்த முடிவு எட்டப்பட்டுள்ளதாக யாழ்ப்பாண மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு பிரதிப் பணிப்பாளர் என்.சூரியராஜா தெரிவித்தார்.

பொதுமக்கள் இதனைக் கருத்தில் கொண்டு தேவையற்ற சிரமங்களை தவிர்த்துக்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ம-7,33)

## மன்னிப்புச்...

களவர்களையும் இராணுவத்தினரையும் ஏன் நினைவுகூரவில்லை என தேசிய பாதுகாப்பு தொடர்பான துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவர் சரத் வீரசேகர கேள்வி யெழுப்பியுள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றும்போதே இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பில் தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அவர்,

“இலங்கை இராணுவத்தினருக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வந்த 30/11 பிரேரணைக்கு நல்லாட்சி அரசாங்கம் இணையனுசரணை வழங்கியது. இதன் பின்னரே இராணுவத்துக்கு எதிராக நெருக்கடிகள் அதிகரித்தன.

முன்னாள் ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் 30/1 பிரேரணையில் இருந்து விலகியபோதும் அப்பிரேரணையின் உள்ளடக்கங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளன.

இலங்கை இராணுவத்தினரை சர்வதேச நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த உறுப்பு நாடுகளுடன் கலந்துரையாடியுள்ளதாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் காரியாலயம் குறிப்பிட்டுள்ளமை அவதானத்துக்குரியது. இவ்விடயம் குறித்து எதிர்க்கட்சியின் நிலைப்பாடு என்ன?

விடுதலைப் புலிகள் போராளிகள் தற்போது பகிரங்கமாக நினைவுகூரப்படுகிறார்கள். கடந்த வாரம் இடம்பெற்ற நினைவேந்தலில் பலர் பங்குபற்றியிருந்தார்கள்.

வெள்ளையர்களும் கலந்து கொண்டார்கள். சர்வதேச மன்னிப்புச் சபையின் செயலாளர் நாயகம் அக்னெஸ் கலமார்ட் விடுதலைப் புலிகள் போராளிகளை நினைவு கூர்ந்தார்.

இந்த யுத்தத்தில் சிங்களவர்களும், இராணுவத்தினரும் விடுதலைப் புலிகளால் படுகொலை செய்யப்பட்டார்கள். சர்வதேச மன்னிப்புச் சபையின் செயலாளர் ஏன் இவர்களை நினைவுகூரவில்லை.

இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் இலங்கையின் உள்ளக விவகாரங்களில் தலையிடுகிறார். வியன்னா ஒப்பந்தத்துக்கு அப்பாற்பட்டு செயற்படுகிறார்.

யாழ்ப்பாணத்துக்குச் சென்று விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் போராளிகளை சந்தித்து சுயநிர்ணயம் பற்றி பேசியுள்ளார். ஆகவே இவரது செயற்பாடுகள் குறித்து அரசாங்கம் அவதானம் செலுத்த வேண்டும்” எனத் தெரிவித்துள்ளார். (ம-7)

## தையிட்டி...

சட்டவிரோதமாக தையிட்டியில் அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸ விகாரைக்கு எதிராக [illegible] போராட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

விகாரையானது தமிழ் மக்களது காணிகளை அபகரித்து சட்டவிரோதமாக கட்டப்பட்டுள்ளதாக தெரிவித்து குறித்த விகாரையை அகற்றுமாறு கோரி ஒவ்வொரு பௌர்ணமி தினத்திலும் போராட்டம் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அந்தவகையில் நேற்றைய தினமும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது அடக்கு முறைகளுக்கு அடங்கவே மாட்டோம், ஆயுதங்களுக்கு அடிபணிய மாட்டோம், இந்த மண் எங்களின் சொந்த மண், வடக்கும் கிழக்கும் தமிழர் தாயகம், சட்டவிரோத விகாரையை உடனே அகற்று மற்றும் சட்டவிரோத விகாரைக்கு பொலிஸ் பாதுகாப்பு என பலவாறு கோஷங்கள் எழுப்பிய வாறு அந்த மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (ம-7)

## கனிய மண்...

நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பில் நேற்று இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மன்னார் தீவிலிருந்து கனிய மண் அகழ்வதற்கான திட்டங்களை நடைமுறைப்படுத்துவது மன்னார் தீவையே முற்றுமுழுதாக அழிக்கும் செயற்பாடாகவே இருக்கும் என்பது எங்களுக்கு தெளிவாக தெரிவிக்கின்றது.

மன்னார் தீவு நிலையான தீவாக இருப்பதற்கு சில பாதுகாப்பு அரண்கள் தேவைப்படுகின்றது.

அதாவது கடல் மட்டத்திலிருந்து சற்று குறைவான நிலையில் இருக்கும் தீவாக மன்னார் தீவு காணப்படுவதால் இது மிகவும் கவனமாக பாதுகாக்கப்படவேண்டிய ஒரு தீவு.

இதனுடைய சுற்றுச்சூழலை பாதிக்கும் வகையில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டால் அது மன்னார் தீவையே அழிப்பதற்கான சாத்தியப்பாட்டை மேலும் அதிகரிப்பதாகவே காணப்படும்.

எனவே, குறித்த பகுதியில் கனிய மணல் அகழ்வதை நாம் முற்றாக எதிர்ப்பதோடு அதனை எல்லா வழிகளிலும் நாம் தடுப்போம் எனவும் தெரிவித்தார். (ம-7,285)

## வங்கக்கடலில்...

எனப் பெயர் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக இந்திய வானிலை மையம் வெளியிட்ட தகவலில், ‘வங்கக் கடலின் தென்மேற்கு மற்றும் மத்திய மேற்கு பகுதியில், வளிமண்டல கீழடுக்கில் சுழற்சி நிலவுகிறது.

தொடர்ந்து, அந்தப் பகுதியில் காற்றமுத்த தாழ்வுப் பகுதி உருவானது.

காற்றழுத்த தாழ்வுப் பகுதி தற்போது வடகிழக்கு திசையில் நகர்ந்து மத்திய மேற்கு மற்றும் அதை ஒட்டிய தெற்கு வங்கக் கடலில் ஆழ்ந்த காற்றமுத்த தாழ்வுப்பகுதியாக வலுப்பெற்றுள்ளது.

வடகிழக்கு திசையில் நகர்ந்து வரும் இந்தக் காற்றமுத்த தாழ்வுப் பகுதியானது காற்றமுத்த தாழ்வு மண்டலமாக இன்று வலுப்பெறும்.

அது மேலும் வலுப்பெற்று நாளை புயலாக மாறும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

வங்கக் கடலில் உருவாகவுள்ள தீவிர புயலுக்கு ‘ரீமல்’ (Remal) எனப் பெயர் வைக்கப்பட்டுள்ளது.

ஓமன் நாடு பரிந்துரைப்படி புயலுக்கு ரீமல் என பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இப்புயல் எதிர்வரும் 26ஆம் திகதி பங்களாதேஷ் அருகில் கரையை கடக்கலாம்.

அப்போது மணிக்கு 100 முதல் 120 கிமீ வேகத்தில் கடுமையான சூறாவளி காற்று வீசக்கூடும்என இந்திய வானிலை மையம் அறிவித்துள்ளது. (ம-7)

## நாட்டின்...

அவதியுறுவதாக, ஆய்வுகள்மூலம்தெரிய வந்துள்ளதாக ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டத்தின் இலங்கை வதிவிடப் பிரதிநிதி தெரிவித்தார்.

இந்நாட்டில் பெண்கள் மற்றும் இளைஞர் சமூகம் பொருளாதார ரீதியாக சிரமங்களுக்கு உள்ளாகி வருவதாகவும், இந்த நாட்டில் பெண்களுக்கு நிதி அறிவு மற்றும் நிதி தொடர்பான தகவல்களை வழங்க வேண்டிய தேவை இருப்பதாகவும் வதிவிடப் பிரதிநிதி குறிப்பிட்டார்.

கடன் மேலாண்மை, சமூகப் பாதுகாப்பு போன்றவற்றைக் கருத்தில் கொண்டு நிதி கல்வியறிவு பற்றிய அறிவு மிகவும் முக்கியமானது என்றும் நிதியியல் கல்வியறிவு மிகவும் அவசியம் என்றும் அவர் கூறினார். (ம-7)

## யாழில்...

யாழ்.நாக விகாரையின் வெசாக் தின நிகழ்வு நேற்று மாலை நாக விகாரையின் விகாராதிபதி சிறி விமலதேரர் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

நாகவிகாரையில் பூசை வழிபாடுகள் நடைபெற்று வெசாக் கூடுகள் திறந்து வைத்து தானங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் வடமாகாண ஆளுநர் பி.எச்.எம்.சாள்ஸ், யாழ். பாதுகாப்பு படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் சந்தன விக்கிரமசிங்க, வடமாகாண கடற்படைத் தளபதி ரியர் அட்மிரல் ரோகித அபயசிங்க பலாலி விமானப்படை தளபதி குறூப் கப்டன் சமிந்த கேரத் வடக்கு மாகாண பிரதம செயலாளர் லட்சுமணன் இளங்கோவன், கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ். மாவட்ட பதில் அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் போன்றோர் கலந்து கொண்டிருந்தனர்.(ம-7)

## மூன்று நாள்...

வுள்ளார்.

இதேவேளை வடக்கில் உள்ள இளைஞர்களுடன் ஜனாதிபதி விசேட சந்திப்பொன்றிலும் கலந்துகொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் மருத்துவ பீடத்தில் பயிற்சிப் பிரிவொன்றையும் திறந்து வைக்கவுள்ளார்.

அத்துடன் கிளிநொச்சி வைத்தியசாலையில் பெண்கள் சுகாதார பிரிவொன்றும் ஜனாதிபதிரணிலால் திறந்து வைக்கப்படவுள்ளது.

வவுனியா மாவட்ட வைத்தியசாலையில் இதய நோய் பிரிவும், மாங்குளம் ஆதார வைத்தியசாலையில் புதிய விடுதியொன்றும் ஜனாதிபதியால் திறந்து வைக்கப்படவுள்ளன.

இவை தவிர யாழ்ப்பாணத்தில் பட்டதாரி ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்கும் நிகழ்விலும் ஜனாதிபதி பங்கேற்கவுள்ளார். இவ்வாறாக 10 முக்கிய நிகழ்வுகளில் ஜனாதிபதி கலந்து கொள்ளவுள்ளார்.

அது மாத்திரமின்றி வடக்கில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பிலும் இவ்விஜயத்தின் போது விசேட அவதானம் செலுத்தப்படவுள்ளது. (ம-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# TECHNO WORLD

தொழில்நுட்பக் கல்லூரி
வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை.

**A/L 2026**

**தொழில் நுட்பப் பிரிவு**

ஆரம்பம் : 25.05.2024 (சனிக்கிழமை)
காலை 8.30 மணி

A/L 2024,2025 வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

(C-0436)

தொடர்புகளுக்கு : 077 017 5346

# A/L MEDIA

கலை, தொழிநுட்ப பிரிவு மாணவர்களுக்கானது

**A/L 2026**

**JUNE 1** இல் ஆரம்பம் (சனிக்கிழமை)

ஆசிரியர்

**திரு.என்.கஜிதரன்**
B.A(Hon) spl.in. Media studies
M.A(Mass Comm.) PGDE
Dip.in.HRM

ஆசிரியரின் சேவை நிறுவனங்கள்

01. பொருளியற் கல்லூரி – யாழ்ப்பாணம்
02. பொருளியற் கல்லூரி – சுன்னாகம்
03. BARATHY – சித்தன்கேணி
04. உயர்கலைக் கல்லூரி – கொக்குவில்
05. தரன் கல்லூரி – மானிப்பாய்
06. H.A.C – மீசாலை
07. VN அக்கடமி – சண்டிலிப்பாய்

- ஊடகக்கற்கைநெறி இலங்கையில் உயர்தரத்திற்கு அறிமுகப்படுத்தியதில் இருந்து கற்பிக்கும் ஆசான்
- உயர்ந்த பெறுபேறுகளை உறுதிப்படுத்திட இன்றே அனுமதிகளை தாமதியாது மேற்கொள்ளவும்

வெளிமாவட்ட மாணவர்களின் நலன் கருதி நிகழ்நிலை Zoom மூலமான வகுப்பும் ஆரம்பமாகின்றது. இலங்கையின் எப் பாகத்திலிருந்தும் இணைந்து கொள்ளமுடியும்

தொடர்புகளிற்கு : (C-0434)

077 395 6158
070 395 6158

A/Lதொழிநுட்பப்பிரிவு

# Techna
Technical Institute

**A/L 2026 புதிய பிரிவு**

கட்டணம் இலவசம்

தொழிநுட்பப்பிரிவு மாணவர்களா நீங்கள்?
உங்கள் கனவுகளை நிறைவாக்க எங்களுடன் இணையுங்கள்

உயிர் முறைமைகள் தொழிநுட்பவியல் – M.விஷ்ணு, P.நிரோஜனன்
தொழிநுட்பவியலுக்கான விஞ்ஞானம் – S.சகதீ
பொறியியல் தொழிநுட்பவியல் – S.மயூரதன்
ICT – T.லவன்
கணிதம் – T.சசிகரன்
விவசாய விஞ்ஞானம் – S.சஜீபன்
புவியியல் – S.P.கரன்

மாணவர்கள் TECHNAவை ஏன் தெரிவு செய்ய வேண்டும்?

- மாணவர்கள் மீது தனிப்பட்ட கவனிப்பு.
- தொடர்ச்சியாக 7 நாட்களும் வகுப்புக்கள் நடைபெறும்.
- மாதாந்தப் பரீட்சை, அலகுப் பரீட்சை, தவணைப்பரீட்சைகள்
- புள்ளிகளுக்கேற்ப Z.SCORE முறையான தரப்படுத்தல்.
- பாடங்களுக்கான கைநூல்கள் வழங்கப்படும்.
- அனுபவமிக்க ஆசிரியர்களின் வழிகாட்டல்.
- இறுதிப்பரீட்சையை நோக்கிய வினைத்திறனான தயார்படுத்தல்.

(C-0443)

வீரசிங்கம் மண்டபம், 3ஆம் மாடி, யாழ்ப்பாணம். 077 170 3549

# DCM யாழ் நகர்

வேம்படி மகளிர் கல்லூரி அருகாமை

**A/L 2026**

கலை, வர்த்தகப் புதிய பிரிவு

ஆரம்பம் : 25.05.2024 காலை 8.00 மணி (சனி)

முன் பதிவுகளை அலுவலகத்தில் மேற்கொள்ளலாம்.


நிர்வாகம் : 077 7789 815

(C-0441)

# Sky Computer

- எம்மிடம் முதல்தர பாவனையில் மடிக்கணனிகளை பெற்றுக் கொள்ளலாம்.
- சகல வகையான கணனி உதிரிப்பாகங்களையும் பெற்றுக் கொள்ளலாம்.
- கணனி மற்றும் printer வகைகளை உத்தரவாதத்துடன் திருத்திக்கொள்ள முடியும்.

45740/=



189, 1/1 KKS Road,
Jaffna town, Jaffna.
Contact :
075 069 8608
021 222 1417

(C-0440)

## வேலையாட்கள் தேவை

**LEGEND OF ARCH FIRM PVT LTD**

நிறுவனத்திற்கு மேசன், கூலி ஆட்கள் தேவை. திறமைக்கேற்ப சம்பளம் நாள் அல்லது Task அடிப்படையில் வழங்கப்படும். (யாழ் மாவட்டத்தில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது)

Director
076 274 7411
077 288 4611

(842)


# மரண அறிவித்தல்



தோற்றம் 10 . 09 . 1989

மறைவு 20 . 05 . 2024

## தியாகராயா தயானன்

( BALA ENTERPRISES GANESWARAM ALAVEDDY - உரிமையாளர்
அகில இலங்கை சமாதான நீதவான் )

அளவெட்டி கணேஸ்வரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தியாகராயா தயானன் அவர்கள் (20.05.2024) திங்கட்கிழமை அன்று அகால மரணமடைந்தார்.

அன்னார் தியாகராயா - பாலரஞ்சினி தம்பதிகளின் அன்பு மகனும் கதிரமலை - ஞானேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகனும் சிந்துஜாவின்(சித்த மருத்துவ வைத்தியர் - உருத்திரபுரம்) அன்புக் கணவரும் அஸ்வந், அஸ்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

அளவெட்டி,
கணேஸ்வரம்.

(854)

தகவல்:
குடும்பத்தினர்


# IELTS - 25.05.2024 New Batch ஆரம்பம்

இத்துடன் Basic & Advance Grammar Classes
இல.53, சிவகுருநாதர் வீதி,
Brown Rd, Jaffna.
077 798 9830 By:-B.MURALI

வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுக்கான Student Visa மற்றும் Work Visa ஒழுங்கு செய்து கொடுக்கப்படும். (855)

# V2 VISA SERVICES
**கனடா**

077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets

- கனடா PASSPORT APPOINMENTS

**விமான பயணச்சீட்டுக்கள்**

- Student Visas
- Online Appointments
- இந்திய Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel Insurance

Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு

(C-0442)

# உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

**V2 TRAVELS**

(C-0442)

எமது கிளைகள்
- கிளிநொச்சி
- சுன்னாகம்
- சாவகச்சேரி
- மானிப்பாய்
- நெல்லியடி
- பருத்தித்துறை
- திருகோணமலை
- வல்வெட்டித்துறை
- கோப்பாய்
- புத்தூர்
- பண்டத்தரிப்பு
- சங்கானை
- கொழும்பு

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com

# விற்பனையாளர் தேவை (பெண்கள்)

எமது ஜவுளி நிறுவனத்திற்கு அனுபவம் உள்ள அல்லது பழக ஆர்வம் உள்ள பெண் விற்பனையாளர் தேவை.
நேரில் வரவும்.

சிவகனேசன் புடவையகம்
41, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.

(856)

# கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலை மானிப்பாய்

பொது சத்திரசிகிச்சை நிபுணர்

DR.S.மதிவாணன்
MBBS, MD SURGERY, MRCS (ENG),
FELLOWSHIP IN VASCULAR IN GENERAL SURGERY (UK)
CONSULTANT SURGEON
BOARD CERTIFIED IN GENERAL SURGERY WITH VASCULAR INTEREST

திங்கள் மற்றும் சனி கிழமைகளில் 4.30 PM

சத்திர சிகிச்சை மற்றும் ஆலோசனை வழிகாட்டல்

அடுத்த 25 சத்திரசிகிச்சை ஆலோசனைகளும் (Consultation Channeling) இலவசமாக வழங்கப்படும்

விசேட குருதிக்குழாய் சத்திரசிகிச்சை கிளினிக்

- ஆறாத புண்களுக்கான சிகிச்சை
- கால் இரத்த நாள் (வெரிக்கோஸ்) வீக்கத்திற்கான சிறப்பு சிகிச்சை
- கால் வீக்கத்திற்கான சிகிச்சை
- நீரிழிவுநோயின் பின்னர் கால்களை பரிசீலித்தலும் தீர்வு வழங்குதலும்

பொது சத்திரசிகிச்சை

- மார்பு கட்டிகள், நீர் கட்டிகள்
- வயிற்று நோவு
- தைரொயிட் பிரச்சினைகள்
- பித்தப்பை உபாதைகள்
- கேணியா
- மலவாசல் இரத்தக்கசிவுகளுக்கான ஆலோசனைகளும் தீர்வுகளும்

(C-437)

முன் பதிவுகளுக்கு :- 074 345 5158 0212255157


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல 191, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.05.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org